Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஐப்பசி 22 புதன்கிழமை (07.11.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 038

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு




இல. 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)
















# வாழ்வின் எழுச்சிக்கு சர்வஜன வாக்கெடுப்பு

## சபாநாயகர் உத்தியோகபூர்வ அறிவிப்பு

(கொழும்பு)

வாழ்வின் எழுச்சி (திவிநெகும) சட்ட மூலத்தை நிறைவேற்றி அதை அமுல் செய்வதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்பதுடன் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

சில அரசியல் கட்சிகள் மேற்படி 'வாழ்வின் எழுச்சி' (திவிநெகும) சட்டமூலத்திற்கு எதிராக உயர்நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த வழக்கு தொடர்பான பரிந்துரையிலேயே மேற்படி விபரங்கள் தெரிவிக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் நாடாளுமன்றில் மேலும் தெரிவித்தார்.

'திவிநெகும' சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அந்த சட்டமூலத்தில் 8ஆவது உறுப்புரையை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

'திவிநெகும' சட்டமூலம் தொடர்பிலான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை

(19) ஆம் பக்கம் பார்க்க

## உக்கிரமடைகிறது டெங்குநோய்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் ஒருவார காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் இருந்து டெங்கு நோயின் தாக்கத்திற்குள்ளாகிய 13 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ்வைத்தியசாலையின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி இந்த நோயின தாக்கத்திற்கு இலக்காகி கொக்குவில், வயாவிளான், கந்தர்மடம் ஆகிய பகுதிகளில் இருந்து ஒவ்வொருவரும் கடந்த இரண்டாம் திகதியிலிருந்து 5 ஆம் திகதி வரை கோப்பாய், சுழிபுரம், அல்வாய் திக்கம், கோண்டாவில் ஆகிய

(19) ஆம் பக்கம் பார்க்க

## நம்பிக்கையில்லாப் பிரேரணை நிச்சயம்; தயாராகிறது நாடாளுமன்றம்

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்காக நாடாளுமன்றம் தயாராகி வருகிறது.

மேற்படி பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டது.

இதனடிப்படையில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அடுத்து வரும் சில நாட்களில் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தவுள்ளார்.

நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதம நீதியரசருக்கு எதிராக 14 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் இலங்கையின் உயர்நீதிமன்ற நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க மீது அரசாங்கம் கொண்டுவந்துள்ள குற்றவியல் பிரேரணை தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் விவரங்களை இலங்கை அரசாங்கம் தற்போது வெளியிட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## பாகிஸ்தானுக்கு விரைந்தார் கடற்படைத் தளபதி

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த கொலம்பகே ஆறு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று பாகிஸ்தான் சென்றுள்ளார்.

பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் முஹம்மட் ஆசிப் சந்திலாவின் அழைப்பை ஏற்று கடற்படைத் தளபதி பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

கடற்படைத் தளபதியாகப் பதவியேற்ற பின்னர் வைஸ் அட்மிரல் ஜயந்த கொலம்பகே மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயம் பாகிஸ்தானுக்கானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தின் போது

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் அமைப்புடன் முரண்படுகிறதா "பட்ஜட்"

(கொழும்பு)


புதிய வரவு - செலவுத் திட்ட சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியல் அமைப்புக்கு முரண்பாடான வகையில் வரையப்பட்டிருப்பதாக ஊயர்நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது.

2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட நிதியொதுக்கீட்டு சட்டமூலத்தின் இரண்டு சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணாக அமைந்திருப்பதாக உயர்நீதிமன்றம் தீர்மானித்திருக்கின்றது என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார்.

முரண்பட்டுள்ள சரத்துக்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## 13 ஆம் அரசியல் திருத்த விவகாரம்; உன்னிப்பாக அவதானிக்கிறது இந்தியா



(டில்லி)

வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது 13 ஆம் திருத்தச் சட்ட விவகாரம் மேலும் சூடு பிடிக்கும் என்றும் இதன்போது அரசினதும் அரசியல் கட்சிகளினதும் சுயரூபம் வெளிப்படும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மன் குர்ஷிட் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக மேற்கிளம்பும் கருத்து நிலைமைகளை இந்தியா தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

13 ஆம் திருத்தச் சட்டம் வாபஸ் பெற்றுக்கொள்வது தொடர்பில் தமக்கு உத்தியோகபூர்வமாக எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என இந்தியா அறிவித்துள்ளது. 13 ஆம் திருத்தச் சட்ட இரத்து அல்லது அதனை வலுவிழக்கச் செய்யும் முயற்சிகள் தொடர்பில் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மன் குர்ஷிட் தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஒபாமா முன்னணியில்

(வொஷிங்டன்)

கடும் போட்டி நிலவிய அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் நேற்று வெளிவர ஆரம்பித்துள்ளது. நேற்று நள்ளிரவு வரை வெளியான முடிவுகளின்படி ஒபாமா முன்னணியில் திகழ்கிறார். இறுதி முடிவு இன்று அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சுகாதாரப் பரிசோதகர் தாக்கப்பட்டமைக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

நேற்று முன்தினம் திருநெல்வேலி பாரதிபுரம் பகுதியில் வடமாகாண பெண்கள் அமைப்புடன் இணைந்து நல்லூர் பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இக்குழுவுக்கு இடையூறு விளைவித்துக் கொண்டிருந்த மதுபோதையிலிருந்த, அப்பகுதியைச் சேர்ந்த நபர் நல்லூர் பொதுச்சுகாதாரப் பரிசோதகருடன் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன், அவரைத் தாக்கியும் காயப்படுத்தியும் உள்ளார்.

இச்செயலானது பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் யாழ். குடாநாட்டில் போர்க்காலச் சூழ்நிலைகளின் போதும் பல்வேறுபட்ட அர்ப்பணிப்புகளுடன் சேவையாற்றும்

(19) ஆம் பக்கம் பார்க்க

கரம்கூப்பி
சிரம் தாழ்த்தும்
மகிந்த



# உடலில் குண்டுச் சிதறல்கள் உள்ள மாணவர்களுக்கு வைத்திய வசதி

## முல்லைத்தீவு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யுத்த காலத்தில் படுகாயமடைந்து, உடலில் உலோகத் துண்டுகளுடன் அவஸ்தை வாழ்வு வாழ்கின்ற பாடசாலை மாணவர்களுக்கு விசேட வைத்திய வசதிகள் செய்து சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுப்பதற்கு முல்லைத்தீவு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்திக் குழுக் கூட்டம் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. மேலும் இக் கூட்டத்தில்,

யுத்தம் முடிவுற்று மூன்றரை ஆண்டுகளாகியும் வன்னி மாணவர்களின் உடலில் உள்ள வெடிபொருட்ச் சன்னங்களின் துகள்கள் அகற்றப்படாமல் இருப்பதுடன் அவ்வாறு பாதிப்புற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை கூட தெரியாமலிருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டபோது இது தொடர்பில் விபரங்களைத் திரட்டித் தன்னிடம் வழங்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் கேட்டுக கொண்டார்.

கல்வி, சுகாதாரம், மின்சார வசதி, சாலைவசதி, போக்குவரத்துப் பிரச்சினைகள், மீள்குடியேற்றம், மீன்பிடி, காணி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

முல்லைத்தீவுக் கல்வித்திணைக் களத்திற்கென்று தனியான கணக்காளர் இன்மையால் நூற்றுக்கும் மேற்பட்ட திட்டப் பணிகள் முடங்கியுள்ளதாகக் கலவித்திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். தற்பொழுது துணுக்காயைச் சேர்ந்த கணக்காளர் தற்காலிகமாக கணக்காளர் பணியினை மேற்கொண்டுள்ளதாகவும் போக்குவரத்துப் பிரச்சினையால் இவரால் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவருக்குப் போக்குவரத்து ஏற்பாடு செய்து கொடுப்பதற்கும் நிரந்தரக் கணக்காளரை நியமிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொளளத் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களில் முப்பதாண்டுகளின் பின்னர் மீள்குடியேறியுள்ள சுமார் 200 குடும்பத்தினருக்கு இன்னமும் தற்காலிக வீடுகள் கூட வழங்கப்படாமல் உள்ளது. மேற்படி கிராமங்களைச் சேர்ந்தவர்களின் 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல காணி மற்றும் மேட்டுக்காணிகளில் ஏற்கனவே சிங்களவர்கள் குடும்பம் குடும்பமாக அத்துமீறிக் குடியேற்றப்பட்டுள்ளனர். மேலும 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளில் இப்பொழுது மீண்டும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுகின்றது என்றும் பொதுமக்கள் சார்பில் முறையிடப்பட்டது. இதைத் தடுத்துநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அரசாங்க அதிபரையும் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினத்தையும் அமைச்சர் றிசாட்பதியுதீன் கேட்டுக் கொண்டார்.

கொக்கிளாய் முகத்துவாரத்தில் தற்பொழுது 160 படகுகளில் வேற்று மாவட்டங்களைச் சேர்ந்த சிங்களவர்களும் நீர்கொழும்பு வாசிகளும் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு முன்னர் வந்தவர்களும் கொட்டில் போட்டு இப்பகுதியில் தங்கி வருகின்றனர். இப்பொழுது பருவகாலம் இன்மையால் அவர்கள் தமது சொந்த மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனர். எனவே இவர்களின் அத்துமீறல்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கின் வசந்தத்தின்கீழ் பிரதானவீதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளபோதிலும், கிராமத்தின் உட்புறங்களுக்கு மின்வசதி செய்துகொடுக்கப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்திற்கு நிதிப்பற்றாக்குறை காரணமாகப் பல பணிகள் தாமதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதுடன் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையைத் தவிர ஏனைய மருத்துவமனைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறையும் தாதியர் உள்ளிட்ட மருத்துவ ஊழியர்கள பற்றாக்குறையும் நிலவுவதாக முறைப்பாடு செய்யப்பட்டது. வைத்தியர்களைப் பொறுத்தவரை தன்னால் ஒன்றும் செய்ய முடியாதுள்ளதாகவும் இதற்கு சுகாதார அமைச்சர்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வடமாகாண சுகாதாரச் செயலாளர் தெரிவித்தார். இதன் போது மேலும் பல விடயங்களும் கலந்துரையாடப்பட்டிருந்தது. (160)

## ஒளிவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் பாடசாலையின் ஒளிவிழா இன்று காலை 9.30 மணிக்குப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட ஒன்று கூடல் மண்டபத்தில் பாடசாலை அதிபர் செ.சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினரராக மெதடிஸ்த தேவாலய வண.பிதா எஸ்.டபிள்யூ.தேவகுமார், கத்தோலிக்க அருட்தந்தை வி.ஏ.மெளலீஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (109)

## மெகா சேமிப்புக் கணக்கிற்கு குலுக்கல் மூலம் அதிஷ்டம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் மெகா சேமிப்புக கணக்கு, 10 ஆயிரம் ரூபா வைப்பில் இடப்பட்டவர்களுக்கு 3 மாதத்திற்கு ஒருமுறை குலுக்கல் மூலம் அதிஷ்டம் பார்க்கப்படுகிறது. இம்மாதம் அதிஷ்டக் குலுக்கலில் முதலாவது பரிசினை திருமதி வசந்தி என்பவருக்கு மடிக்கணினி ஒன்றும் 2 ஆவது பரிசினைப் பெற்ற திருமதி விசாலாட்சி என்பவருக்கு தலையாத்திரை செய்வதற்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டதுடன் சிறுவர் சேமிப்பு பொற்கணக்கு வைத்திருந்த 5 பேருக்கு பிறந்த நாள் பரிசில்களும் நேற்று வங்கிக் கிளை முகாமையாளர் ஜி.சகாதேவனால் வழங்கப்பட்டது. (104)

## வறிய மாணவர்களுக்கு உதவும் இளைஞன்!

யாழ்ப்பாணத்திலுள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு பிரித்தானியாவில் வசித்து வரும் யாழ்.இளைஞன் ஒருவர் உதவ முன்வந்துள்ளார். வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்கள் வறுமை காரணமாக தமது கல்வியை இடைநிறுத்தாது தொடர்ந்து கற்று சிறந்த நிலைமைக்கு வரவேண்டும் என்பதற்காகவே தான் இவர்களுக்கான உதவிகளை வழங்க முன்வந்துள்ளதாக அந்த இளைஞர் குறிப்பிட்டார்.

தனது வருமானத்தில் ஒரு சிறிய பகுதியை சேமித்து யாழ்ப்பாணத்திலுள்ள அவரது நண்பர் ஒருவர் ஊடாக வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், ஆடைகள் என்பவற்றை வழங்கி வருகின்றார்.

அண்மையில், கல்வியங்காட்டைச் சேர்ந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை மாணவன் ரஞ்சித் யதுஸ்ரியன் மற்றும் சரஸ்வதி முன்பள்ளிச் சிறுமி றோபேர்ட் தமிழ்வானி ஆகிய இரண்டு பேருக்கு குறித்த இளைஞனின் நிதியுதிவியுடன் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்கு நெடுந்தீவில் சிரமதானம்



நெடுந்தீவுப் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருகுவதைத் தடுக்கும் நோக்குடன் நெடுந்தீவு செபநாயகபுரத்தில் நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன் தலமையில் சிரமதானப் பணி இடம்பெற்றது. இதில் பிரதேச சபை உறுப்பினர்களான மரியசெபஸ்ரீயான்பிள்ளை அமலடொறின், விஜிதாஸ்யோகராசா, லோறன்ஸ் மற்றும் நெடுந்தீவுப் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் யெயராசா ஜெனற்யன்சன், ஆகியோர் கிராம மக்களுடன் இணைந்து கலந்து கொண்டனர். கடந்த 4 ஆம் திகதி முதல் இடம்பெறும் இச் சிரம தானம் இன்னும் இடம்பெறவுள்ளது. இவ் சிரமதானப் பணியூடாக அப்பிரதேசத்தில் நுளம்பு பெருகுவதை கட்டுப்படுத்த முடியுமென மக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.


யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### கேள்வி அறிவித்தல்

### வீட்டுடன் அமைந்த காணி

யாழ்ப்பாணம் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான வீட்டுடன் கூடிய காணி விற்பனை செய்யப்படவுள்ளது.

- இல. 67, மூத்தவிநாயகர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள பரப்பு 1, குளி 09.00 விஸ்தீரணமுள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
- கேள்விப் பத்திரங்களினை சமர்ப்பிக்க விரும்புவோர் தமது **முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், கேள்வித் தொகை** என்பவற்றினைத் தெளிவாகக் குறிப்பிட்டு தமது கையொப்பத்துடன், இடது பக்க மேல் மூலையில் **"காணி கொள்வனவுக்கான கேள்வி"** எனக் குறிப்பிட்டு மூடிய கடிதவுறையில் தலைவர் / பொதுமுகாமையாளர் யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம், இல.127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 20.11.2012 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
- காணி கட்டடத்தினைப் பார்வையிட விரும்புவோர் சங்கத் தொலைபேசி இலக்கத்துடன் (0212222587) அலுவலக நேரத்தில் பொது முகாமையாளருடன் தொடர்புகொண்டு பார்வையிட முடியும்.
- கேள்வி விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி 20.11.2012.
- கிடைக்கப்பெற்ற மூடிய கேள்விப் பத்திரங்கள் இயக்குனர் சபைக் கூட்டத்தில் திறக்கப்பட்டு, விலை மதிப்பீட்டிற்கமைய ஆராய்ந்து காணி விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானம் இயக்குனர் சபையால் மேற்கொள்ளப்படும்.

சங்கத்தின் இயக்குனர் சபைத் தீர்மானத்திற்கமைவாக,
பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம், ப.நோ.கூ.சங்கம். (C/1746)


## அரச அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளர் நியமனம்



புத்தூர் மேற்கைச் சேர்ந்த தில்லைம்பலவாணர் விமலன் அண்மையில் நீதி அமைச்சினால் நடாத்தப்பட்ட அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர் பரீட்சையில் சித்தியடைந்து யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி எ.எ. ஆனந்தராஜா முன்னிலையில் தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொாண்டார். இவர் அகில இலங்கை சமாதான நீதவானும் கோப்பாய் பிரதேச செயலகத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தராகவும் கடமையாற்றி வருகின்றார்.

## மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். உபகுழு சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் உபகுழுவினருடனான சந்திப்பு ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு அதன் யாழ். காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள சந்திப்பில் கலந்துகொள்ள இந்த உபகுழுவில் அங்கம் வகிக்கும் 13 உறுப்பினர்களுக்குமான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இவ்வருட முற்பகுதியில் யாழ். கிறின்கிறாஸ் விடுதியில் நடைபெற்ற சிவில் சமூகங்களுடனான இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் சந்திப்பின்போதே இந்த உபகுழு யாழ். மாவட்டத்தில் மனித உரிமை விடயங்களை மேம்படுத்தும் முகமாக ஸ்தாபிக்கப்பட்டது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அனுஸ்டிக்கப்படவுள்ள சர்வதேச மனித உரிமைகள் தினம் மற்றும் மனித உரிமை தொடர்பான நடவடிக்கைகள் குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார். (பா)

# பத்திரிகை ஆணைக்குழுவில் 1050 முறைப்பாடுகள் பதிவு

## – ஆணைக்குழுவின் தமிழ் முறைப்பாட்டுப் பிரிவு பொறுப்பதிகாரி –

(யாழ்ப்பாணம்)

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டுக்குழுவிற்கு இதுவரை ஆயிரத்து ஐம்பது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவற்றுள் சுமார் 70 வீத மானவற்றுக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளது என இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தமிழ் முறைப்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரி அமீன் உசைன் தெரிவித்துள்ளார்.


கடந்த சனிக்கிழமை ஞானம்ஸ் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சிங்கள பத்திரிகைகளுக்கு எதிராகவே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

அதற்கு அடுத்த படியாக ஆங்கில பத்திரிகைகளுக்கு எதிரான முறைப்பாடுகளும் கிடைக்கின்றன. ஒப்பீட்டளவில் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு எதிராகக் கிடைக்கின்ற முறைப்பாடுகள் குறைவானதாக உள்ளது.

நாம் எம்மால் தீர்க்க முடியாத சுமார் ஐந்து வீதமான முறைப்பாடுகள் எமது மத்திய குழுவிற்கு சமர்ப்பித்து அதன் மூலம் தீர்வினைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். எங்களுக்கு மத்திய குழுவின் தீர்வு நீதி மன்றத்தினாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நம்பகத்தன்மையானது என்றார். (54)



இலங்கை இலக்கிய பேரவையினால் சிறந்த நூல்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா கலைஞருக்குப் பரிசில் வழங்குவதைக் காணலாம். (105)

# மாகாண மட்ட பொதுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித்திணைக் களத்தினால் நடத்தப்படும் தரம் 9 மாணவர்களுக்கான மாகாண மட்டப் பொதுப் பரீட்சை எதிர் வரும் 19 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை சகல பாடசாலைகளிலும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் எதிர்வரும் 19 ஆம் திகதி தமிழ் மொழியும், 20 ஆம் திகதி கணிதமும், 21 ஆம் திகதி வரலாறும், 22 ஆம் திகதி விஞ்ஞானமும், 23 ஆம் திகதி ஆங்கிலமும், 24 ஆம் திகதி சமயமும் இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான குறித்த நேர அட்டவணை மாகாண கல்வித்திணைக்களத்தினால் சகல வலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# "நனோ தொழில் நுட்பம்" மாணவருக்கான கருத்தரங்கு

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா தெற்கு மற்றும் வடக்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான நனோ தொழில்நுட்பம் தொடர்பான கருத்தரங்கு நேற்று வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

ஒன்றியத்தின் செயலாளர் கார்த்தீஸ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நனோ தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆய்வாளர்கள் கலுந்து கொண்டிருந்ததுடன் வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீட பீடாதிபதி கருத்தரங்கை நெறிப்படுத்தியிருந்தார்.

இக் கருத்தரங்கிற்கான பூரண ஒத்துழைப்பினையும் பிரக்டிக்கல் அக்சன் நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (160)

# விண்ணப்பங்கோரல்

மீசாலை கமநல சேவை நிலையத்தினர் சிறுதானிய உற்பத்தியாளர்களுக்கான தானிய விநியோகத்திற்கென், விவசாய சம்மேளனங்களினூடாக உற்பத்தியாளர்களின் விபரங்களைக் கோரியிருக்கின்றனர்.

தற்போது இச் சிறுதானிய உற்பத்தியாளர்கனின் விபரங்கள் ஒவ்வொரு விவசாய சம்மேளனங்களினூடாகவும் பதிவு செய்யப்பட்டு வருகின்றது. சிறுதானிய உற்பத்தியாளர்கள் தத்தமது விவசாய சம்மேளனங்களில் தமது விபரங்களைப் பதிவு செய்யலாம். இதன்படி தற்போது கல்வயல் விவசாய சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் தமது பெயர்களை பதிவு செய்து கொண்டிருப்பதாக அதன் செயலாளர் கா.வேதநாயகம் தெரிவித்தார். இச்செய்கைத்திட்ட த்தின் கீழ் கௌபி, நிலக்கடலை, பயறு என்பன உற்பத்தி நிலத்தின் அடிப்படையில் பங்கீடு செய்து வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பாரதி முன்பள்ளி கலைவிழா

(வவுனியா)

வவுனியா வைரவபுளியங்குளம் பாரதி முன்பள்ளியின் கலைவிழா எதிர்வரும் 10. ஆம் திகதி காலை 9 மணிக்கு வவுனியா நகரசபை கலாசரமண்டபத்தில் முன்பள்ளியின் அதிபர் திருமதி ஜெயராசா சந்திரா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்ரின், சிறப்பு விருந்தினராக வவுனியா பொது வைத்தியசாலை அத்தியட்சகர் த.சத்தியமூர்த்தி, வவுனியா மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் திருமதி வா.கிருபாசுதன் கலந்து கொள்வதுடன் சிறுவர்களின் பல கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (160)

# தென்னை செய்கையாளர்களுக்கு மானிய விலையில் உரம்

(சாவகச்சேரி)

மானிய விலையில் தென்னைப்பயிர்ச்செய்கையாளர்களுக்கு உரம் விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெற்பயிருக்கு வழங்கப்பட்டது போன்று தென்னைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மானியத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், 6 ஆயிரம் ரூபா பெறுமதியான தென்னை உரம் மானிய விலையில் 1200 ரூபாவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் வரணியில் இடம்பெற்ற தென்னைப்பயிர்ச் செய்கையார்களுக்கான உரப்பாவனை பற்றிய விளக்கவுரையும் செயன்முறை நிகழ்வும் நடத்தப்பட்ட போது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய வடபிராந்திய தென்னை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் இதனைத் தெரிவித்திருந்தார். (11)

# சுற்றுலா மையமாக மாறும் பண்ணைக் கடற்கரைப் பகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டையின் தென் புறத்தில் பண்ணை சுற்றுவட்டத்திலிருந்து கிழக்காக பழைய கோட்டைக்கு அப்பால் புதிதாகக கட்டப்படும் பொலிஸ் நிலையம் வரையான கடற்கரைப்பகுதி உல்லாசப்பயணிகளுக்கான அழகுடனான கடற்கரையாக உருவாக்கப்பட்டு வருகிறது.

இக்கடற்கரைப் பகுதியில் மழை காலத்திற்கு முன்பதியம் பண்ணப்பட்ட புல் பதியங்கள் மழை காலத்தோடு வளர்ந்து பசுமையாகக் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

பண்ணை சுற்று வட்டத்திலிருந்து கோட்டைக்கு மேற்காக கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான கட்டடம் வரையான பகுதியே அழகு படுத்தப்பட்டுள்ளது.

இக்கட்டடம் வீதி அபிவிருத்தி அதிகார சபையும், படையினரும் இணைந்து பல மில்லியன் ரூபா செலவில் அமைத்துள்ளதாக சபை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் பல இருக்கைகள் சீமெந்தினால் அமைக்கப்பட்டுள்ளதுடன், நெளிந்து வளைந்து செல்லும் பாதைகளும் அழகாக அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இக்கட்டடத்தில் தொழிலாளர் தங்குவதற்காக ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட கட்டடத்திற்கு சுற்றுமதில் அமைக்கும் பணிகளும் கடற்கரைப் பகுதியில் நிழற்குடைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (23)



வடமாகாண கல்வித் திணைக்களம், தீவக கல்வி வலயம் இணைந்து நடத்திய முழுநிலா நிகழ்வு வேலணை மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.செல்வராசா உரையாற்றுவதையும், மாணவர்களின் கலைநிகழ்வுகளையும், கலந்து கொண்ட விருந்தினர்களையும் காணலாம். (படங்கள்: கே.நந்தகுமார்)

முதல் குற்றத்தை சரி என்று சாதிப்பவன் இரண்டாவது குற்றத்தையும் செய்தவனாகிறான். - பொன்மொழி.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## உண்ணும் உணவே மருந்துமாம்!

'நோயைக் குணப்படுத்துவதை விட நோயைத் தடுப்பது மேல்' என்று அன்று சொன்னார்கள். 'நோயைத் தடுப்பதே ஒரே வழி' என்பது இன்றைய அறிவுரை. நோய் வருமுன் தடுத்துக் கொள்ள வேண்டுமானால், நம் சூழல் சுகாதாரமாக இருக்க வேண்டும். நாம் சுவாசிக்கும் காற்றும், குடிக்கும் நீரும், உண்ணும் உணவும் மிக முக்கியம். அவற்றின் மூலமாக உள்ளே செல்லும் நோய்க்கிருமிகள்தான் பெரும்பாலும் உடலில் நோயை உண்டாக்குகின்றன.

எனவே சுற்றுப்புறம் சுத்தமாக இருக்க வேண்டும். காற்றிலும், நீரிலும், உணவிலும் நஞ்சைக் கலக்கும் சூழல்மாசுச் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். நம் உடல், உள்ளம், வீடு, நாடு, பூமி எல்லாவற்றையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

தொடர்ந்து நமது பழக்க வழக்கங்களையும் நோய் அண்டாதவாறு மாற்றிக்கொள்ள வேண்டும். உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடு, உடற்பயிற்சி, தேவையான அளவு தூக்கம் இவற்றோடு மனதையும் மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும்.

உடற்பயிற்சிகளின் முக்கியத்துவத்தை உணரும் நாம் உள்ளத்துக்குப் பயிற்சி செய்ய மறக்கிறோம் அல்லது மறுக்கிறோம். சில உடற்பயிற்சிகள் உள்ளத்துக்கும் பயிற்சியாக அமைபவை. யோகா, தியானம், இசை, நல்ல சொற்பொழிவு கேட்டல், நல்ல புத்தகங்களைப் படித்தல், இயற்கையோடு ஒன்றி வாழுதல் எனப் பல பயிற்சிகள் உள்ளத்துக்கு நல்ல தாகும்.

உள்ளப் பயிற்சியும் உடல் நோயைக் குணப்படுத்தும் என்பதை அறிவோம். அத்தோடு, நம் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் நம் உணவு பழக்கமும் முக்கிய பங்கு வகிக்கிறது. நகரங்களில் வசிப்பவர்கள் அதிக கொழுப்புள்ள உணவுகளை சாப்பிடுவார்கள். உடற்பயிற்சியும் செய்வதில்லை. உடல் உழைப்பும் இருப்பதில்லை. இதனால் வாழ்க்கை முறை சார்ந்த நோய்களான உடற்பருமன், நீரிழிவு நோய் போன்றவற்றால் அதிகம் பாதிக்கப்படுவார்கள்.

இப்போது இந்த நோய்கள் கிராமங்களில் இருப்பவர்களுக்கும் அதிகம் வருவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. குறிப்பாக பெண்கள் மத்தியில் உடற்பருமன் நோய் அதிகம் இருப்பது தெரிய வந்துள்ளது. பருமன் என்பது தோற்றத்தில் மட்டுமல்ல, உடல் ஆரோக்கியத்திலும் பலவிதமான பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடியது. நடப்பது, ஓடுவது, உடற்பயிற்சி செய்வது, நீச்சல், சைக்கிள் ஓட்டுவது, தோட்ட வேலை செய்வது போன்ற உடல் உழைப்பு சார்ந்த வேலைகள் அனைத்தும் குறைந்துவிடும். இதனால் உடல் மேலும் குண்டாகும். அதோடு நீரிழிவையும், இதய நோயையும் கொண்டு வரும். இத்தனைக்கும் காரணமாக இருப்பது மாறிவரும் நம் உணவுமுறை.

கிராமங்களிலும் கூட இப்போது ..பாஸ்ட் ..புட் எனப்படும் துரித உணவு உணவகங்கள் வந்துவிட்டன. கொழுப்பு அதிகமான உணவு உள்ளே போகும் அதேசமயம் உடல் உழைப்பு வெகுவாகக் குறைந்துவிட்டது. இதனால் உடம்பு குண்டாகிவிடுவது பெரும்பாலானோரை உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் வருத்தும் நோயாகி இருக்கிறது. மேலை நாடுகளில் 60 வயதில் வரும் நோய்கள் எல்லாம் இங்கு, 20 வயதிலேயே வந்துவிடுகிறது. இதோடு சிகரெட், குடிப்பழக்கம் சேரும்போது ஆபத்து இன்னும் அதிகமாகிவிடுகிறது.

நோய் வந்தபிறகு எப்படியும் அதைச் சாப்பிடாதே இதைச் சாப்பிடாதே என்று மருத்துவர்கள் கட்டளைபோடப் போகிறார்கள். அதற்கு முன்னரே உணவுப்பழக்கத்தில் கவனமாக இருந்து கொண்டோமானால் அந்தத் தொந்தரவும் வரப்போவதில்லை. உண்ணும் உணவே நாமாவது போல அதுவே நமக்கு மருந்துமாம்!

- ஆசிரியர்

துமிந்த சில்வாவின்

# அகற்றப்பட்ட மண்டையோட்டுக்கு அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்ட மண்டையோட்டின் பகுதிகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்திய சாலை பணிப்பாளருக்கே கொழும்பு பிரதான நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் தொழிற்சங்க ஆலோசகர் பாரத லக்ஷமன் பிரேமச்சந்திர கொலைசெய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் தினத்தன்று முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா ஸ்ரீஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாக அவரது மெய்ப்பாதுகாவலரான அமைச்சு பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த அனுர துசார டி மெல் சாட்சியமளித்திருந்தார்.

அவர் தனது சாட்சியத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போது மண்டையோட்டின் சில பகுதிகள் அகற்றப்பட்டதாகத் தெரிவித்திருந்ததாக அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

மண்டையோட்டில் அகற்றப்பட்ட பகுதிகள் இருந்தால் அது வழக்கிற்கு முக்கியமானது என பிரதிவாதி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்

இதனைத் தொடர்ந்தே அகற்றப்பட்ட மண்டையோட்டின் பகுதிகள் தொடர்பிலான வைத்திய அறிக்கையை எதிர்வரும் 20 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்திய சாலைப் பணிப்பாளருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

முல்லேரியாவில் 2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா காயமடைந்ததுடன், ஜனாதிபதியின் தொழிற்சங்க ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர பலியானமை குறிப்பிடத்தக்கது.

# பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தினால் நடத்தப்படும் மனித வள ஆளுமை அபிவிருத்தி தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 10 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் 18 வயதிற்கு மேற்பட்டவர்களைக் கலந்து பயன் பெறுமாறும் பயிற்சியின் நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் கோண்டாவில் பொது நூலகர் அறிவித்துள்ளார்.

# மற்றுமொரு அகதிகள் படகு ஆஸி. சென்றடைந்தது

## இலங்கையர் உட்பட 110 பேர் கிறிஸ்மஸ் தீவில்

110 அகதிகளுடன் படகொன்று நேற்று முன்தினம் காலை கிறிஸ்மஸ் தீவுக் கடற்பிராந்தியத்தில் இடைமறிக்கப்பட்டதாக அவுஸ்ரேலிய மொனிங் ஹெரால்ட் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

இலங்கையர் உள்ளிட்ட அகதிகள் உடனடியாக கிறிஸ்மஸ் தீவுக்கு கொண்டு செல்லப்பட்டு ஆரம்ப பாதுகாப்பு, சுகாதார மற்றும் அவர்கள் குறித்த விபரங்கள் சேகரிக்கும் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்று முன்தினம் வரையான நான்கு நாள் காலப் பகுதியில் 6 படகுகளில் அவுஸ்ரேலியா செல்ல முனைந்த 429 பேர் அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதுதவிர, அவுஸ்ரேலியாவில் அகதி அந்தஸ்து கோருபவர்களின் மனுக்கள், அவுஸ்ரேலி யாவிற்கு வெளியே பரிசீலிக்கப்படும் என கடந்த ஆகஸ்ட் மாதம் அரசாங்கம் எடுத்த முடிவின் பின்னர் நேற்று முன்தினம் வரை 6 ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து அவுஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் டோனி எப்பொட் அதிருப்தி வெளியிட்டுள்ளார். அகதிகளின் வருகை குறித்து அவுஸ்ரேலிய அரசாங்கம் முற்றாக கட்டுப்பாட்டை இழந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கன்பராவில் ஊடகவியலாளர் மத்தியில் நேற்று முன்தினம் காலை அவர் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

தினமும், பல நாடுகளைச் சேர்ந்த அகதிகள் வருவதைக் கட்டுப்படுத்துவதற்கான உறுதியான திட்டம் எதனையும் அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய நிலப்பரப்பிற்கு வெளியே அகதிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவது குறித்து அரசாங்கம் எடுத்த முடிவு எந்த விதமான நன்மையினையும் வெளிப்படுத்தவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சித்திரவதையால் ஓமானில் செவிப்புலனை இழந்த பணிப்பெண்

ஓமான் தலைநகர் மஸ்கட்டில் பணிபுரிந்து வரும் இலங்கைப் பெண்ணொருவர் வீட்டு உரிமையாளரின் சித்திரவதையால் ஒருபக்க செவிப்புலனை இழந்துள்ளார்.

பணிபுரிந்தமைக்கான சம்பளத்தைக் கேட்டதால் இலங்கை பணிப்பெண் இவ்விதம் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இது குறித்து தகவல் அறிந்த மஸ்கட்டில் உள்ள இலங்கை தொழில் ஆலோசகர் அலுவலக அதிகாரிகள் உடன் விரைந்து இலங்கைப் பணிப்பெண்ணை தனியார் வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் பின்னர் அவர் அரச வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டதாகவும் இலங்கை ஆலோசகர் எம்.எம்.தேசப்பிரிய தெரிவித்தார்.

45 வயதுடைய முலிய நோனா என்ற இலங்கைப் பணிப்பெண்ணே இவ்வாறு பாதிக்கப்பட்டவர் என தெரியவந்துள்ளது.

ஒக்ரோபர் 18, 2011 தொடக்கம் முலிய நோனா மஸ்கட்டில் பணிபுரிந்து வரும் நிலையில் அவர் தனது வீட்டு உரிமையாளரால் மிருகத்தை போன்று நடத்தப்பட்டதாகவும் ஒரு வருடகாலமாக துன்புறுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இலங்கைப் பெண் நண்பி ஒருவரிடம் தனக்கு ஏற்பட்ட காயங்களைக் காட்டியதாகவும் இறுதியில் பார்க்கும்போது அவரது கைகளில் வீக்கம் காணப்பட்டதாகவும் நண்பி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து வீட்டு உரிமையாளரை அழைத்து இலங்கை ஆலோசகர் கேட்டபோது பெண்ணின் அனைத்து மருத்துவ செலவுகளையும் ஏற்றுக் கொள்வதாக அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

உரிமையாளரின் தாக்குதலுக்கு இலக்கான முலிய நோனா வலது காதின் செவிப்புலனை இழந்துள்ளார்.

# சொல்புத்திக்காரரா கூட்டமைப்பினர்?

**'இம்சை அரசன் 23ம் புலிகேசி' திரைப்படத்தில் அரசி மனோரமாவுக்கு 'இரட்டைக் குழந்தைகள் பிறக்கும்' எனவும் 'மூத்த பிள்ளை சொல்புத்தி – இரண்டாவது பிள்ளை சுயபுத்தி' என ஜாதகத்தைக் கணிக்கும் ஜோதிடர் குறிப்பிடுவார். இதனைக் கேட்கும் மனோரமாவின் சகோதரர் நாசர், சுயபுத்தி உள்ள பிள்ளை இருந்தால் தனது திட்டங்கள் நிறை வேறாது எனக் கருதி அதனைக் கொல்ல ஏற்பாடு செய்வார். சொல்புத்தி உள்ள பிள்ளையை தான் சொல்வதை எல்லாம் கேட்கும் 'மக்கு' இளவரசனாகவே வளர்ப்பார்.**

## மட்டு நேசன் கட்டுரையிலிருந்து

சிங்கள மக்கள் குறிப்பாக பௌத்த சிங்களவர்கள் ரணிலை ஆற்றலுள்ள ஒரு தலைவராகக் கருதவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினரோ அவரை வெற்றியைப் பெற்றுத் தரும் ஒரு வழிகாட்டியாக எண்ண வில்லை. ஆனால் ஓரிரு தரப்பினர் மட்டும் ரணிலின் கயிற்றை அப் படியே விழுங்கி விட்டு தமிழ் மக்களின் அதிருப் தியை சம் பாதித்து வருகின்றனர். அந்த சொல்புத்திக்காரர்கள் வேறு யாருமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான்.

கடந்த பொதுத்தேர்தலில் வடக்குக் கிழக்குக்கு வெளியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் போட்டி யிடவில்லை. அப்படிப் போட்டியிட் டிருந்தால் கொழும்பில் ஒரு பிரதி நிதித்துவம் கட்டாயம் கிடைத்திருக் கும். அது தவறியிருந்தாலும் தேசி யப் பட்டியல் மூலம் மேலதிக ஆசனங்கள் கிடைக்கும் வகை யில் களுத்துறை, கம்பஹா மாவட்ட தமிழ் மக்கள் வாக்களித் திருப்பார்கள். ஆனால் ரணிலின் நட்பு கருதி வடக்குக் கிழக்குக்கு வெளியே போட்டியிடுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தவிர்த்திருந்தனர்.

"நீ பொரி கொண்டு வா, நான் உமி கொண்டு வருகிறேன். இருவருமாக ஊதி ஊதிச் சாப் பிடலாம்" என்ற கதையாக அர சுக்கு எதிரான தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நண்பர் போல் காட்டிக் கொண்ட ரணில், யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசி யக் கட்சியின் சார்பில் திருமதி விஜயகலா மகேஸ்வரனை நிறுத்தி அரசுக்கு எதிரான வாக்குகளின் ஒரு பகுதியைப்பெற்று தமது பிரதி நிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொண்டார். இங்கே மொத்தத்தில் இழக்கப்பட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு ஆசனமே. நட்புக்கு ஒருவழிப் பாதையைக் காட்டிய ரணிலின் தந்திரத்தை தமிழ்த் தலைமையால் இனங் காண முடியவில்லை.

அடுத்த நாடகம் யாழ் மேதின நிகழ்வில் இடம்பெற்றது. காணா மற்போனோரின் உறவுகள்; அரசி யல் கைதிகளின் பெற்றோர் மற் றும் உறவினர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் சம்பந்தன் ஐயாவின் கையில் சிங்கக் கொடியைக் கொடுத்து ஆட்டுவித்தார் ரணில். இதன்மூலம் திரு- மலையில் புலிக் கொடியை ஏற்றிய சம்பந்தனின் கையில் சிங்கக் கொடியை ஏந்த வைத்தவர் நானே என்ற செய் தியை தென்பகுதி மக் களுக்குத் தெரியப் படுத்தினார் ரணில். அப்போதுகூட ரணி லால் ஆட்டுவிக்கப்படும் சொல்புத்திப் பிள்ளைகளாக தாம் இருக்கின்றோமே என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உணரவில்லை. மாறாக, "பத்ரகாளி யின் பக்தன் நான். எனவே தான் சிங்கக் கொடியை ஏந்தினேன்" என்ற சம்பந்தன் ஐயாவின் கூற்றைக் கேட்டு புளகாங்கிதம் அடைந்தனர் அவர்கள்.


தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்ற பிரேரணை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியின் கீழ் செயற்படும் யாழ் மாந- கரசபையில் 29.03.12 அன்று ஆளுந்தரப் பினரால் கொண்டு வரப்பட்டது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் ஆதரவளிக்க இப்பிரேரணை ஏகமன- தாக நிறை வேற்றப்பட்டது. இதே பிரே ரணை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழுள்ள காரைநகர் பிரதேச சபையில் கொண்டுவரப்பட்ட போது ஐக்கிய தேசியக் கட்சி உறுப் பினர்களும் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஆனால் கொழும்பு மாநகரசபையில் இதே பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக் கப்பட்ட போதெல்லாம் ஐக்கிய தேசி யக் கட்சியினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஐக்கிய தேசியக் கட்சி நடத்தும் எதிர்ப்பு நடவடிக்கை களுக்கு அழைத்துச் செல்லும் மனோ கணேசன் தலைமையிலான கட்சி யினரும் தயங்குகின்றனர். "இப்பிரே ரணையை அங்கே நிறைவேற்ற முடியாது. சிங்களவர்கள் இதனை ஒத்துக் கொள்ள மாட்டார்கள்" என பக்குவமாக எடுத்துரைக்கின்ற னர். காரைநகரில் இதே கொள்கைக்கு ஆதர வளிப்போர் ஏன் கொழும்பில் ஆதர வளிக்க முடியாது?



அவர்களையும் சொல்லிக் குற்ற மில்லை. நல்லூர் பிரதேசசபைத் தலைவர் வசந்த குமார் தாக்கப்பட் டதைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது ஆளுகைக்கு உட்பட்ட சகல உள்ளூ ராட்சி சபைகளி லும் தீர்மானம் நிறைவேற்றினர். அவர்களே காரை நகர், கரைச்சி உள்ளிட்ட ஒரு சில சபைகள் தவிர்ந்த ஏனைய சபைகளில் தமிழ் அரசியல் கைதி களின் விடுதலை தொடர்பில் தீர்மானம் கொண்டு வரவில்லை. இதற்காக போய் மண்டையை உடைப்பதைவிட தேங்காயை உடைத்தால் எண்ணெயை ஊற்ற கொப்பராவாவது கிடைக்கும் என அவர்கள் எண்ணி யிருக்கலாம். இந்நிலையில் ரணிலிடம் இதை எதிர்பார்க்க முடியாதுதான்.

அவரைப் பொறுத்தவரை யாழ்ப் பாணத்தில் அவர் கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கு ஆட்கள் தேவை. அதற்கு சுலபமாகக் கிடைக்கக்கூடிய ஏமாளிகள் காணாமற்போனோர் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத் தினர் தான். இதற்காக கொழும்புமாநகர சபையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து சிங்கள பௌத்தர்களின் வாக்குகளை இழக்கஅவர் தயாரில்லை. அவருக்கு காரைநகரில் ஏமாந்த தமிழர்களின் வாக்குகளும் வேண்டும். கொழும்பில் பௌத்த சிங்களவர் களின் வாக்கு களும் வேண்டும். மொட்டை யும் அடித்து குடும்பியும் கட்ட அவரால் தான் முடியும். ஆனால் ரணில் எப்படி உதைத்தாலும் அவரது கரங் களை உதற கூட்டமைப்பினர் தயாரில்லை. இறுதியாக




உலகில் வலம் வருகிறார். கொழும் பில் கிரிக்கெட் விளையாடுகிறார். கே.பி துரோகியா இல்லையா என்பதை தமிழ் மக்கள் தீர்மானிக் கட்டும். அவர் குற்றவாளி என்று சுமந்திரன் எப்படிக் கூறமுடியும்? ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தனது தலைமறைவு வாழ்க்கையை முடித்துக் கொண்டு இலண்டனில் இருந்து நாடு திரும் பிய சில தினங்களில் இரத்மலான பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன் றில் உரையாற்றினார்.

"இந்திய விமானங்கள் வடபகுதி யில் உணவுப் பொட்டலங்களைப் போட்டன. அதனை சிறிலங்கா விமானப்படை தடுத்து நிறுத்த முன் வராததாலேயே கட்டுநாயக்க படைத் தளம் மீது தாக்குதல் நடத்தினோம்" எனக் குறிப்பிட்டார் அவர். பல்லாயிரம் பேர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளும் தகுதியைக் கொண்ட ஏ.எஸ்.பி தலைமையிலான பொலிஸார் பாதுகாப்பு வழங்கிய நிலையிலேயே அவர் இவ்வாறு பகிரங்கமாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். இன்று ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட எந்தவொரு ஜே.வி.பி.யின ருமே சிறைகளில் இல்லை. கே.பி 18.05.2009க்கு முன் செய்தவற் றுக்காக குற்ற வாளி என்றால் சோமவன்சவும் குற்றவாளிதான். இந்தக் குற்றவாளி யோடு எத்தனை அரசியல் நிகழ்வுகளில், தேர்தல் தொடர்பான சந்திப்பு களில் சுமந்திரன் கலந்து கொண் டிருப்பார். ஏன் இதுவரை சோம வன்ச அமரசிங்கவைக் கைது செய்ய வேண்டும் என இவர் கோரிக்கை விடுக்கவில்லை. அது தான் போகட்டும்.

21.10.12 அன்று கே.பிக்கு எதிராக பொங்கி எழுந்தார் தேசியப் பட்டியல் உறுப்பினர் சுமந்திரன். ஐக்கிய தேசியக் கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட் டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் சுமந்திரனும், டாக்டர் ஜயலத் ஜய வர்த்தனவும் நீதியை நிலைநாட்ட தமது ஆர்வத்தை வெளிப்படுத்தினர். "சர்வ தேச இன்ரபோல் பொலிஸாரால் தேடப் படும், எமது பக்கத்து நாட்டில் தேடப் படும் பட்டியலில் உள்ள கொலைக் குற்றங்களைப் புரிந்த குற்றவாளிக ளோடு அரசாங்கம் பேசுகிறது. அவ் வாறானவர்களை தமிழ் மக்களின் தலைவர்களாக பலாத்காரமாக திணிப் பதற்கு அரசு முயற்சிகளை எடுத்து வருகின்றது. இதற்கு தமிழ் மக்கள் விரைவில் தமது எதிர்ப்புகளை வெளிப் படுத்துவார்கள்" எனக் குறிப்பிட்டார் சுமந்திரன்.

இதில் சொல்லப்படாத விடயம் என்ன வென்றால் இவரது குற்றச்சாட்டுக்கள் 19.05.2009க்கு முன்னர் கே.பியின் செயற்பாடுகள் குறித்தவை என்பதே. யார் விரும்பினாலோ, விரும்பா விட் டாலோ கே.பிக்கு இந்தப் போராட்டத் தில் முக்கிய பாத்திரம் இருந்தது என்பது உண்மை. அதற்காக கே.பியின் இன்றைய நிலைப்பாடு சரியென்று அர்த்தமல்ல.

ஆனால் இப்போராட்டத்துக்கும் சுமந் திரனுக்கும் என்ன சம்பந்தம்? அவர் ஒரு ஷெல் சத்தம் கேட்டிருப்பாரா? அல் லது பதுங்கு குழிக்குள் வாழும் வாழ்வு வாழ்ந்திருப்பாரா? இன்று ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டுவிட் டது. இனிமேல் அது சாத்தியமில்லை என்பது உண்மை. ஆனால் இந்த ஆயுதப் போராட்டத்தினால் உருவான அரசியல் சூழ் நிலைகளின் விளை வாகவே ஒரு வாக்குக்கூடப் பெறாத சுமந்திரன் தமிழரின் பிரதிநிதியாக

இவரோடு கூட பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வோரில் இரத்தக் கறை படிந்த கரங்களைக் காணவில்லையா? அவர்கள் புனிதர்களாகி விட்டனரா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சொல்புத்திக்காரர்கள் என்பதற்கு இன்னொரு உதாரணம் கடந்த 21.10.12 அன்று வெளியான வீர கேசரி வாரவெளியீட்டின் தலைப்புச் செய்தி.

"இனிநாம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு இந்தியாவையும், சர்வதேசத்தையுமே சார்ந்ததாகும்" என தெரிவித்துள்ளார் சுமந்திரன்.

சரி! எப்போது தான் எங்கள் கருத்துக்களை இந்தியாவையோ, சர்வதேசத்தையோ ஏற்கவைக்கப் போகின்றீர்கள்? தமிழருக்கு சுயபுத்தி கதாபாத்திரம் (உத்தமபுத்திரன்) தென்படவே மாட்டாதோ?

ஏற்கெனவே இராணுவப் புலனாய் வுப் பிரிவின் முன்னாள் முக்கியஸ் தரான பிரிகேடியர் ரிஸ்வி சக்கி தலைமையிலான Verite Research எனப்படும் ஆய்வு நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்துள்ளது தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு. தனது இனத்தை அழிக்க தீவிரமாகச் செயற்பட்டவர் களிடம் ஆலோசனை கேட்க காசு கொடுக்கும் ஒரு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தான். உல கில் வேறெந்த கட்சியும் இந்த வர லாற்றைக் கொண்டிருக்கவில்லை.

**- நன்றி: பொங்குதமிழ்**

# நாட்டில் ஜனநாயகம், நீதியை அரசாங்கம் இல்லாதொழிக்கின்றது

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் நாட்டின் ஜனநாயகத்தையும் நீதியையும் இல்லாதொழித்து வருவதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கோட்டே ரயில் நிலையத்தில் நடைபெற்ற எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

செய்ய முடியாதது எதுவும் இல்லை என்ற மமதையில் அரசாங்கம் இயங்கி வருகின்றது.

இன்று அரசாங்கம் ஓர் மன நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஜனநாயகம், நீதி மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பை உதாசீனம் செய்து வருகின்றது.

17 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்து 18 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தியது.


ஊடகவியலாளர்களை கொலை செய்ததுடன், கை கால்களை உடைத்தது.

ஊடகங்களைப் போன்றே நீதிமன்றக் கட்டமைப்பையும் பலவீனப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

நீதிமன்றத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப நாம் அனைவரும் அணி திரள வேண்டுமென அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# நீதிமன்றத்தைப் போன்று நாடாளுமன்றம் இயங்கவேண்டும்

## எதிர்க்கட்சி வலியுறுத்து



(கொழும்பு)

நாடாளுமன்றம் நீதிமன்றத்தைப் போன்று இயங்க வேண்டுமென எட்டு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புதிய இடதுசாரி கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி உள்ளிட்ட எட்டு கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றப் பிரேரணை விசாரணை செய்யப்படும் வரையில் நாடாளுமன்றம் நீதிமன்றத்தைப் போன்று இயங்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தின் தேவைகளுக்காக நீதிமன்றக் கட்டமைப்பின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கக் கூடாது.

18 ஆம் திருத்தச் சட்டம் மூலம் நீதிமன்றின் மீது கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

17 ஆம் மற்றும் 13 ஆம் திருத்தச் சட்டங்கள் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

# முன்னர் கைச்சாத்து பின்னர் வாபஸ்

(கொழும்பு)



சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான லங்கா சமசமாஜ கட்சி பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையில் கைச்சாத்திட்டதை வாபஸ் பெற்றுக் கொண்டது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயவுக்கு எதிரா குற்றப் பிரேரணையில் முன்னதாகக் கைச்சாத்திட்டிருந்தாலும் அதனை பின்னர் வாபஸ் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்ததாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வை.ஜி. பத்மசிறி தெரிவித்துள்ளார்.

கட்சியின் மத்திய குழு கூடிய தில் மத்திய குழு உறுப்பினர்கள் பலவேறு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தமையினால் கையொப்பத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள தீர்மானித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எம்.வி. சண் சீ கப்பலின் தலைவருக்கு பிணை அனுமதி

(கொழும்பு)

கனடாவுக்கு 492 இலங்கை தமிழர்களை ஏற்றிச்சென்ற எம் வி சண் சீ கப்பலின் தலைவர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள லெசி ஜனா இமானுவேல் எனபவர் நேற்றுமுன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இவர், மீது மனித கடத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது இந்த நிலையில் குறித்த கப்பல் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கும் 6 பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட 3 ஆவது ஆள் இமானுவேல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இவர் 45,000 டொலர் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



இருப்பினும் கனடாவில் இருந்து வெளியேறுவதற்கு இவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிணை வழங்கலுக்கான காரணத்தை தெரிவிக்க பிரிட்டிஸ் கொலம்பியா உயர்நீதிமன்றத்தின் உதவி நீதிபதி ஒஸ்டின் கலென் மறுத்து விட்டார்.

ஏற்கனவே இதே குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்த நடராஜா மகேந்திரன் மற்றும் தம்பிராநாயகம் ராஜரட்ணம் ஆகியோரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சண் சீ கப்பல் 2010 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13 ஆம் திகதியன்று கனடாவைச் சென்றடைந்தது. அதில் 380 ஆண்கள் 63 பெண்கள் 49 சிறுவர்கள் உள்ளடங்கியிருந்தனர்.

இவர்கள் இலங்கை, மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து ஏற்றிச் செல்லப்பட்டிருந்தனர்.

# பிரதம நீதியரசருக்கு எதிரான பிரேரணை; அமெரிக்க கருத்துக்கு ஜி.எல்.பதிலடி

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கண்டித்து அமெரிக்கா வெளியிட்ட கருத்துக்கு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடுமையான பதிலடி கொடுத்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து அமெரிக்கா வெளியிட்டுள்ள கருத்து ஏற்புடையதல்ல என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் சில சர்வதேச அமைப்புக்கள் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்துக் கருத்து வெளியிட்டுள்ளனர். எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை நிலைமைகளைப் புரிந்து கொள்ளாமலேயே சில நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் அரசாங்கத்திற்கு விரோதமான வகையில் கருத்து வெளியிட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்பது பற்றிக் கூட அறிந்து கொள்ளாமல் விமர்சனக் கணைகள் தொடுக்கப்பட்டுள்ளமை வருத்தமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உலக நாடுகள் இலங்கையை நோக்கும் விதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார். அரசியல் சாசனத்திற்கு அமைவான முறையில் சகல சட்டங்களையும் பின்பற்றியே நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# இலங்கை - தென்கொரியா நேரடி விமான சேவை

(கொழும்பு)

கொழும்பிற்கும் தென் கொரியாவின் தலைநகரான சியோலிற்கும் இடையிலான நேரடி விமான சேவை அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பமாகும் என இலங்கைக்கான தென் கொரிய தூதுவர் ஜோங்மூன் சோய் தெரிவித்தார்.

தென் கொரியாவின் தேசிய தினம் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு கொழும்பிலுள்ள தென் கொரியா தூதுவராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதான நிகழ்வு கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் இடம்பெற்றது.



இதன்போதே இலங்கைக்கான தென் கொரிய தூதுவர் ஜோங் மூன் சோய் இந்த அறிவிப்பை விடுத்தார். பல வருடங்களுக்கு முன்னர் கொழும்பிற்கும் சியோலிற்கும் இடையிலான நேரடி விமான சேவை இடம்பெற்றது. எனினும் சில காரணங்களினால் 1984 ஆம் ஆண்டு இந்தச் சேவை இடை நிறுத்தப்பட்டது.

எனினும் தற்போது இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர ரீதியிலான உறவு சிறந்த முறையில் உள்ளது. இதனாலேயே இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி விமான சேவை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என தென் கொரியா தூதுவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கல்வி, தகவல் தொழில்நுட்பம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்ற பல துறைகளுக்கு தென் கொரியா தொடர்ந்து இலங்கைக்கு உதவும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மதுரை அகதி முகாமில் இலங்கையர்கள் அவலம்

(கொழும்பு)

தமிழ்நாட்டின் மதுரை அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் கவனிப்பாரற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.


அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் மக்கள் அடிப்படை தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அவதியுறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு ஜுலை கலவரத்தைத் தொடர்ந்து அதிகளவான இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திற்கு சென்றனர். இவ்வாறு சென்றவர்களில் பலர் தமிழகத்தின் பல்வேறு அகதி முகாம்களில் தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

இவ்வாறு அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மாநில அரசாங்கம் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

மாறாக அகதி முகாம்களில் வாழ்வோருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகிறது. உதாசீனமான போக்கைப் பின்பற்றி வருகின்றது.

# நாட்டில் குழப்பங்கள் நீங்க அரசியலமைப்பைத் திருத்தவேண்டும்



(கொழும்பு)

நாட்டில் தோன்றியுள்ள பல குழப்பங்களின் மூல காரணங்களான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை, விருப்பு வாக்குமுறைமை மற்றும் வேறு யாப்பு திருத்தங்களை இரத்துச் செய்யும் வகையில் அரசியலமைப்பை திருத்த வேண்டுமென வண.மாதுலுவாவே சோபித்த தேரர் கோரியுள்ளார்.

அரசியலமைப்பைத் திருத்துமாறு அதிகாரப் பீடத்திடம் மக்கள் கோரவேண்டும்.

ஆட்சி முறையில் சுதந்திரம், வெளிப்படைத்தன்மை என்பன இல்லாத காரணத்தால் குற்றச் செயல்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் என்பன அதிகரித்து வருவது காணக்கூடியதாக உள்ளது.

சம அந்தஸ்துகொண்ட சமூகத்தை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதனை அரசாங்கத்தினால் செய்யமுடியாதென்றால் அதனை மக்கள்தான் செய்ய வேண்டும்.

ஜனநாயகத்தையும் நீதியையும் உறுதிப்படுத்துவதற்கு மக்கள் முன்வந்து உழைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. சுதந்திரமான நீதித்துறை, சுதந்திரமான வாக்களிப்பு, சுதந்திரமான பொலிஸ் என்பவை இந்நாட்டில் இல்லை.

மக்கள் நீண்டகாலமாக அமைதியாக இருந்துவிட்டனர். இந்நிலையில், அரசியலமைப்பை மாற்றவேண்டுமென குரல் எழுப்புவதற்கான காலம் கனிந்துள்ளது என்றார்.

# தீவகப் பிரதேச மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவோம்



(யாழ்ப்பாணம்)

தீவகப்பிரதேச மாணவர்களின் கல்விவளர்ச்சியை மேம்படுத்த நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றோம் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தீவக பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை காரை ஊரி அ.மி.த.க.பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டட திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மிகவும் பின்தங்கிய பிரதேசங்கள் என குறிப்பிடப்படுகின்ற தீவகப் பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், நாமும் தொடர்ந்தம் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றோம்

கற்றல், கற்பித்தலுக்கான பௌதிக வளத்தேவைகளை நாம் விரைவாகப் பூர்த்தி செய்து வருகின்றோம். இருப்பினும் இப்பிரதேச மாணவர்களிற்கு சிறந்த கல்வியை வழங்க கல்விச்சமூகம் தயக்கம் காட்டி வருகின்றமை எமக்கு வேதனையளிக்கின்றது. ஆசிரியர்கள் எத்தகைய இடையூறு இருப்பினும் மனத்தூய்மையுடன் தீவகமாணவர்களிற்கு கல்வி கற்பிக்க முன்வர வேண்டும்.

குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களிற்கான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ச்சியாக நிலவுவதுடன், பெரும்பாலான ஆசிரியர்கள் இவ் வலயத்திலிருந்தே இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர். எனவே இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே தீவக மாணவர்கள் சிறப்பானதொரு கல்வியைப் பெறமுடியும். இதற்கு கல்விச் சமூகத்தினரும் பெற்றோரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் காரைநகர் பிரதேச அமைப்பாளருமான வீ.கண்ணன் (றஜனி), தீவக வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை சமூகத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



**தும்பளை அஞ்சலியகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினவிழா அண்மையில் அஞ்சலியகத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (116)**

# அச்சுவேலி கல்லூரி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(அச்சுவேலி)

அச்சுவேலி பிரதேச சபைக்கு உட்பட்ட 9 ஆம் வட்டாரம் எல்லை வீதி கடந்த 20 வருடங்களுக்கு மேல் திருத்தப்படாமல், கவனிப்பாரற்றுக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பாமாகியுள்ள நிலையில் குறித்த வீதியூடாக பயணிக்க முடியாமல் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி மத்திய கல்லூரி வீதியில் இருந்து ஆரம்பிக்கும் இவ்வீதியின் ஒரு குறிப்பிட்ட 200 மீற்றர் நீளமுள்ள பாதையே இவ்வாறு விடுபட்டுள்ளதாகவும், இது தொடர்பாக பிரதேச சபையின் கவனத்திற்கு பல தடவை எடுத்துக் கூறிய போதும், பிரதேச சபையினர் கண்டும் காணாதவாறு இருப்பது கவலை தருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இவ்வீதியூடாக மாணவர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் எனப்பலர் பயணம் செய்துவரும் நிலையில் இவ்வீதி குண்டும் குழியுமாக இருப்பதால் தாம் சிரமமப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக அச்சுவேலி பிரதேச சபையினர் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

(எம்.ஆர்)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்

தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 08.11.2012

மற்றுமொரு புனிதபூமியில் அரங்கேறிய அசிங்கம்!

அருகில் வந்திருக்கும் ஆபத்து!

அமெரிக்கத் தூதுவரின் மட்டு. விஜயமும் அரசியலும்




ஹிட்லர் வாழ்க்கையில் நிகழ்ந்த திடுக்கிடும் சம்பவங்கள்!



பறக்கும் டைனோசர்

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு – சுவை – சுவாரசியம் இதுதான் தினமுரசு



# நினைத்ததே நடந்தது

(மும்பை)

ருவென்ரி-20 உலக கோப்பை அணியில் இடம் கிடைத்த நிலையில், இங்கிலாந்து தொடரில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். இது நடந்தது எனக்கு மிகப்பெரிய செய்தி என சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் தெரிவித்தார்.

போட்டியில் விக்கெட் எடுக்கவில்லை என்பதற்காக சிறந்த பந்துவீச்சாளர் இல்லை என்று ஆகிவிடாது. அவரது திறமை யான பந்துவீச்சும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண் டும். ஆனால், கிரிக்கெட் விளையாடாதவர்கள் எல்லாம் என்னைப் பற்றி முட்டாள் தனமாக எழுதினர்.

ஒரு சுழற்பந்து வீச்சாளரின் பங்கு என்பது, ஆடுகளத்துக்கு ஏற்ப மாறும். வோர்ன், முரளிதரன் போன்ற ஜாம்பவான்கள், பல போட்டிகளில் விக்கெட் வீழ்த்தாமல் இருந்துள்ளதைப் பார்த்துள்ளேன். அதுபோல் தான் நானும், வித்தைக்காரன் (மேஜிக் மேன்) அல்ல எனவும் அவர் தெரி வித் தார்.

## இறுதிப் பட்டியலில் போல்ட்



இவ்வாண்டுக்கான சிறந்த மெய்வல்லுனர் வீரருக்கான இறுதிப் பட்டியலில் ஜமைக்கா வின் அதிவேக ஓட்டவீரர் உசைன் போல்ட் பெயரிடப்பட்டுள்ளார்.

சர்வதேச மெய்வல்லுர் சம்மேளனங்களின் சங்கத்தின் இவ்வாண்டுக்கான சிறந்த வீரர் பட்டியிலில் டேவிட் ரூடிசா, ஏரிஸ் மெரீட் ஆகியோரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் 100, 200 மற்றும் நான்கு தர 400 மீற்றர் ஓட்டங் களில் உசைன் போல்ட் தங்கப் பதக்கங்களை பெற்றிருந்தார்.

அமெரிக்காவின் ஏரிஸ் மெரீட் 110 மீற் றர் தடைதாண்டல் ஓட்டத்தில் சாதனையை நிலைநாட்டியதுடன், தங்கப் பதக்கத்தை வெற்றிகொண்டிருந்தார்.

பெரும்பாலும் இந்த விருது உசைன்போல் டிற்குக் கிடைக்கக்கூடிய அதிக வாய்ப்பு இருப்பதாக விளையாட்டு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நதியா சம்பியன்



சம்பியன்ஸ் டென்னிஸ் தொடரின் மகளிருக்கான ஒற்றையர் பிரிவு சம்பி யன் பட்டத்தை ரஷ்யாவின் நதியா பெட்ரோவா வென்றெடுத்துள்ளார்.

பல்கேரியாவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் டென்மாரக்கின் கரோலின் வொஸ்னியாக்கியை 2-0 என்ற செட் கணக்கில் நதியா பெட்ரோவா வீழ்த் தினார்.

முதல் செட்டை 6-2 என்ற புள்ளிகள் கணக்கில் கைப்பற்றிய நதியா பெட் ரோவா இரண்டாவது செட்டை6-1 என்ற புள்ளிகள் கணக்கில் தன்வசப்படுத்தினார்.



# பந்துவீச்சாளர்களுக்குப் பாதகம்

(கொழும்பு)

சர்வதேசக் கிரிக்கெட் சபையால் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களானது துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிக சாதகத்தன்மையாகவும், பந்துவீச்சாளர்களுக்கு எதிரானவையுமாக உள்ளது என இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரி வித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் புதிய மாற்றங்களின்படி ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பவர் பிளே அல்லாத ஓவர்களில் 30 யார் வட்டத்திற்கு வெளியே 4 வீரர்களை மாத்திரம் களத்தடுப்பில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இது 5 களத்தடுப்பாளர்களாகக் காணப்பட்டது.

இந்த மாற்றம் துடுப்பாட்ட வீரர்களுக்குப் பெரிதும் சாதகமாகக் காணப் படுவதாக மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். நான் ஒரு துடுப்பாட்ட வீரன் என்ற போதிலும், இந்த மாற்றம் கிரிக்கெட்டிற்கு எதிரானது. சுழற் பந்து வீச்சாளர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையால் ஒருநாள் சர்வதேசப் போட்டி களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடை யிலான 2ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியிலேயே முதன்முறையாக அமுலாக்கப்பட்டிருந்தன. அப்போட்டியில் இலங்கை அணி டக்வேர்த் லூயிஸ் முறையில் 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிண்ணம் வென்றார் டேவிட் பெரர்



பரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொட ரின் ஆடவருக்கான ஒன்றையர் பிரிவு சம்பியன் பட்டத்தை ஸ்பெய்னின் டேவிட் பெரர் வெற்றிகொண்டுள்ளார்.

இறுதிப் போட்டியில் போலந்தின் ஜேசி ஜோனோவிச்சை 2-0 என்ற செட் கணக்கில் பெரர் வீழ்த்தினார்.

போட்டியின் முதல் செட்டை 6-4 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிகொண்ட டேவிட் பெரர் இரண்டாவது செட்டையும் 6-3 என தன்வசப்படுத்தினார்.

# தென்னாபிரிக்காவின் சிறந்த வீரர்

(ஜோகானஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் பிலாண்டர், இந்த ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு வீரர் விருது பெறுகிறார்.

தென்னாபிரிக்காவில் விளையாட்டுத் துறையில் சிறப்பாகத் திகழ்பவர்களுக்கு ஆண்டு தோறும் சிறந்த நட்சத்திரம், சிறந்த வீரர், மற்றும் வீராங்கனைகளுக்கான விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான போட்டி கடுமையாக இருந்தது. இதற்கான பட்டியலில் சேட் லீ கிளாஸ் (நீச்சல்), ஆம்லா (கிரிக்கெட்), நடாலி டு டாய்ட் (நீச்சல்), சியாபாங்கோ (கால்பந்து), பிலாண்டர் (கிரிக்கெட்), ஆஸ்கார் பிஸ்டோரியஸ் (தடகளம்), கேஸ்டர் செமன்யா (தடகளம்) ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டனர்.

லண்டன் ஒலிம்பிக் ஆண்கள் 200 மீ, பட்டர்பிளை பிரிவு நீச்சல் போட்டியில், அமெரிக்க ஜாம்பவான் பெல்ப்சை வீழ்த்தி, தங்கப் பதக்கம் வென்ற சேட் லீ கிளாஸ், சிறந்த விளையாட்டு நட்சத்திரம் விருதை தட்டிச் சென்றார். சேட் லீ கிளாஸ், 100 மீ., பட்டர்பிளை பிரிவிலும் வெள்ளிப் பதக்கம் கைப்பற்றினார்.

சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை, டெஸ்ட் போட்டிகளில் அசத்திய பிலாண்டர் கைப்பற்றினார். சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான விருதை, ஒலிம்பிக் 800 மீ., ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கம் வென்ற கேஸ்டர் செமன்யா பெற்றார்.

சிறந்த மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரருக்கான வீரர் விருதை, ஆஸ்கார் பிஸ்டோரியஸ் வென்றார். இதேபோல் சிறந்த மாற்றுத்திறனாளி விளையாட்டு வீராங்கனைக்கான விருதை நடாலி டு டாய்ட் கைப்பற்றினார்.

# மிஸ்பா ஆதரவு

(லாகூர்)

டெஸ்ட் போட்டிகளை பகலிரவு ஆட்டமாக நடத்துவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் ஒருநாள் மற் றும் டெஸ்ட் தலைவர் ஆதரவு தெரி வித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையால் முன் னெடுக்கப்பட்டுள்ள இந்த நகர்வு சிறந்த ஒன்றெனவும் மிஸ்பா உல் ஹக் குறிப் பிட்டுள்ளார்.

முதல்தரப் போட்டிகள் பகலிரவு ஆட்டமாக அடிக்கடி நடத்தப்பட வேண்டு மெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செம்மஞ்சள், மஞ்சள் அல்லது இளஞ் சிவப்பு நிறப் பந்துகளில் எதனைப் பயன்படுத்துவது என்பது குறித்து போட்டிகளை நடத்தும் நாடுகள் தீர் மானிக்க முடியும் எனவும் சர்வதேச கிரிக்கெட் சபை கூறியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

# வாழ்த்தியோருக்கு நன்றி

(காஜியாபாத்)

இந்திய அணியின் இளம் கிரிக் கெட் வீரர் விராத் ஹோலி நேற்று முன்தினம் தனது 24ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினர். இதற்கு சக வீரர் யுவராஜ் சிங் வாழ்த்து தெரி வித்துள்ளார். அவர் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், உனது பிறந்த நாளில் ரஞ்சி கோப்பை போட்டி யில், டில்லி அணிக்காக பங்கேற்ற தால், நாம் விருந்திற்குச் செல்ல முடியவில்லை. இறைவன் உன்னை ஆசீர்வதிக்கட்டும் எனத் தெரிவித்துள் ளார்.

இதற்குப்பதில் தெரிவித்து விராத் ஹோலி வெளியிட்ட டுவிட்டர்செய்தி யில், வாழ்த்துத் தெரிவித்த அனை வருக்கும் நன்றி எனத் தெரிவித்தார்.





# தரப்படுத்தலில் முன்னேற்றம்; எமது இலக்கு

டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் ஐந்து இடங்களுக்குள் வரவேண்டும் என்பதே எமது இலக்கு. இதற்கான திட்டமிடலை நாம் மேற்கொண்டு வருகின்றோம் என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பயிற்றுவிப்பாளர் ஒற்றிஸ் கிப்ஸன் தெரிவித்துள்ளார்.

உலக ருவென்ரி-20 தொடரை வெற்றிகொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி தற்போது பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் பங்கு பற்றவுள்ளது. தற்போது டெஸ்ட் தரப்படுத்தலில் 7ஆம் இடத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி உள்ளது. இந்நிலையில் கருத்துத் தெரிவித்த ஒற்றிஸ் கிப்ஸன், 2012ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஓரளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்திய போதிலும், இவ்வாண்டைச் சிறப்பான நிலையில் முடித்துக் கொள் விரும்புகின்றோம். பங்களாதேஷ் அணி எங்களை விடத் தாழ்வான நிலையில் காணப்படுவதால் பங்களாதேஷிற்கெதிரான தொடரில் எங்களால் அதிகபுள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியாது என்ற போதிலும், அடுத்த 12 மாதங்களுக்குள் டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் 5 இடங்களுக்குள் இடம்பெறுவதே எங்கள் இலக்காக உள்ளது. பங்களாதேஷிற்கெதிரான டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளின் மாயச்சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் சிறப்பாகச் செயற்படுவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அவர் விரைவாகக்கற்கும் திறனுடையபந்து வீச்சாளர் எனவும் தெரிவித்தார்.

# கிண்ணம் வென்றது மானிப்பாய் இந்து



(வட்டுக்கோட்டை)

புட்ஸல் கால்ப்பந்தாட்டப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியை வென்று மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி புட்ஸல் என்ற பெயரில் முன்னாள் அதிபர் கே.ஏ.செல்லையா ஞாபகார்த்தமாக அணிக்கு 5 பேர் கொண்ட கால்பந்தாட்டப் போட்டியை பிக்நெல் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தியது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளிலிருந்து 8 அணி கள் மேற்படி சுற்றுப்போட்டிக்கு பங்கு பற்றியிருந்தன. மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 4:2 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியினையும், அரையிறுதியில் 3:1 என்ற கோல் கணக்கில் சென்.ஜோன்ஸ் கல்லூரியினையும் வென்று, இறுதிப்போட்டிக்கு உள்நுழைந்தது.

இளவாலை ஹென்றியரசர் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினையும், அரையிறுதியில் 7:0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியையும் வென்று இறுதிப்போட்டிக்கு நுழைந்தது.

இறுதிப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. முதல் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கோல் மழை தொடர்ந்தது. முதல் பாதி ஆட்டத்தில் அந்த அணி 3 கோல்களைப் போட்டது. பதிலுக்கு ஹென்றியரசர் கல்லூரி அணி 1 கோல் மாத்திரம் போட்டது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஹென்றியரசர் கல்லூரி சுதாகரித்துக் கொண்டது. அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு ஆட்டத்தில் சூட்டினை கூட்டியது.இருந்தும் மானிப்பாய் இந்து மேலும் ஒரு கோலைப் போட்டு, திரும்பவும் ஆட்டத்தை தன் கையில் எடுத்தது. இறுதி வரை இரு அணியும் வேறு கோல்கள் போடவில்லை. இறுதியில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று புட்ஸல் சம்பியனாகியது.மூன்றாமிடத்திற்கான போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வீழ்த்தியது.

# தெல்லிப்பளைக் கோட்ட கால்பந்து வயாவிளான் மத்திய ம.வி சம்பியன்



(அளவெட்டி)

யாழ்.தெல்லிப்பளை கல்விக் கோட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 14 வயதுப்பிரிவினருக்கான கால்பந்தாட்டப் போட்டியில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் கோட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும் வயாவிளான் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இருஅணிகளும் கோல்கள்எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் களமிறங்கி மோதிக்கொண்டன. இந்நிலையில், வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி ஒரு கோலைப் பெற்றது. ஆட்ட நிறைவில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இதேவேளை, மூன்றாமிடத்துக்கான போட்டியில் அருணோதயாக் கல்லூரியை தண்ட உதை மூலம் 3 - 0 என்ற கோல்கணக்கில் வீழ்த்திய யூனியன் கல்லூரி மூன்றாமிடத்தைப்பெற்றது. (93)

# அகதிகளுக்கான விளையாட்டுப்போட்டி

(சிட்னி)

அவுஸ்ரேலியாவில் பல்வேறு முகாம்களில் உள்ள அகதிகளுக்கு இடையில் சமூக உறவை ஏற்படுத்தும் முகமாக விளையாட்டு போட்டிகள் நடைபெற்றுள்ளன.

அவுஸ்ரேலியாவின் அகதிகள் நலன் நிலையங்கள் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

அவுஸ்ரேலியாவின் பல்வேறு முகாம்களில் உள்ள இலங்கை, ஆப்கானிஸ்தான், ஈரான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் அகதிகள் இதில் கலந்துக் கொண்டனர்.

அவர்களுக்கு இடையில் கிரிக்கட் மற்றும் காற்பந்து போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

# இரு பிரிவுகளில் பற்றிக்ஸ் வெற்றி

(வட்டுக்கோட்டை)

பொன் அணிகள் கால்பந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி இரு பிரிவுகளில் வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இக்கால்பந்தாட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

இந்நிலையில், 14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 4 கோல்களைப் பெற்றுக்கொண்ட அதேவேளை, யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஒரு கோலை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் பொன் அணிகளின் கால்பந்தாட்டப் போட்டியில் வருடாவருடம் விளையாடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மரதன், சைக்கிள் ஓட்டம் விண்ணப்பிக்க வேண்டுகை


(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் மரதன், அரை மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வீர,வீராங்கனைகள் விரைவாக தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி மாத்தளையில் நடைபெறவுள்ளதாகவும், இதில் யாழ். மாவட்ட வீர,வீராங்கனைகள் பங்கு கொள்ள விரும்பின் அவர்களுக்குரிய போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

முதலிடத்தைப் பிடிக்கும் வீர, வீராங்கனைகளுக்கு பெறுமதியான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மட்டுப்படுத்தப்பட்ட வீரர்களே பங்குபற்ற முடியும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (93)



யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு வரும் மைதானத்தைப் பார்வையிட்ட ஜேர்மன் குழுவினர் யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு ஒரு தொகுதி பந்துகளை வழங்கியது. இதனை ஜேர்மன் தூதுவராலய பிரதித் திட்டப்பணிப்பாளா மர்ஜா எய்னிகினால் யாழ். கால்பந்தாட்ட வீரர்களுக்கான பந்துகளை யாழ். கால்பந்தாட்ட லீக் தலைவர் அன்ரனிப்பிள்ளையிடம் கையளித்தார். இந்நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)



# யாருக்கும் தெரியாமல் வாழ்ந்து வருபவர்கள்!

- சாரு நிவேதிதா -

சமீபத்தில் நானும் நண்பர்களும் குற்றாலம் போய் விட்டு மதுரைக்குக் காரில் திரும்பிக் கொண்டிருந்தோம். வழியில் இடைகால் என்ற ஊர். கலாப்ரியாவைப் பார்க்காமல் இடைகாலைத் தாண்ட முடியுமா? எனக்கும் அவருக்கும் வயது வித்தியாசம் கொஞ்சம்தான் என்றாலும் என் மாணவப் பருவத்தில் (எழுபதுகள்) என்னை உருவாக்கிய சமகாலத் தமிழ் இலக்கியவாதிகளில் அவரும் ஒருவர். காதலிக்காத மனிதர்களே இல்லை. ஆனால் கலாப்ரியாவின் சசி மட்டுமே சாகாவரம் பெற்றிருக்கிறாள். நகுலனின் சுசிலாவைப் போன்றவள் அவள். தமிழ் இலக்கியம் உள்ள வரை இருப்பார்கள் இந்தப் பெண்கள்.

கலாப்ரியாவுக்கு போன் போட்டு உங்களை வந்து பார்க்க முடியுமா என்று கேட்டேன். ஓ, பார்க்கலாமே என்று சொல்லி விட்டுத் தன் மோட்டார் சைக்கிளில் மெயின் ரோட்டுக்கு வந்து விட்டார். அதற்குள் நாங்கள் --------- -- (பெயர் மறந்து விட்டது) டீச்சர் வீடு எங்கே இருக்கு என்று சொல்லி வழியைக் கேட்டு வைத்திருந்தோம். வீட்டுக்கு அழைத்துச் சென்றார். சென்ற முறை (பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு) சென்ற போது குழந்தைகளாக இருந்த அவர் புதல்விகள் இன்று பெரிய பெண்களாக இருந்தார்கள். கலாப்ரியா தன் ஈஸி சேரில் அமர்ந்து கொண்டார். என்னோடு வந்தவர்களை “என் நண்பர்கள்” என்று சொல்லி அறிமுகப்படுத்தியபோது சற்று அதிர்ச்சியுடன் பார்த்தார். (நண்பர்களில் சிலர் கல்லூரி மாணவர்கள்!) சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பினேன். உருப்படியாக எதுவும் பேசவில்லைதான். ஆனால் அந்தச் சந்திப்பை என் வாழ்வில் மறக்க முடியாது. அது மிகவும் உணர்வுபூர்வமான சந்திப்பு.

வெளியே வந்ததும் கலாப்ரியாவைப் படித்திருக்கிறீர்களா என்று நண்பர்களிடம் வினவினேன். “ராஜு” முருகன் கட்டுரையில் அடிக்கடி கலாப்ரியா கவிதைகளை மேற்கோள் காட்டுவார்” என்றார் ஒரு நண்பர். மற்ற நண்பர்கள் என் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. Shame on you philistine Tamils! கலாப்ரியாவுக்கு மட்டும் அல்ல, ஒட்டு மொத்தத் தமிழ் இலக்கியத்துக்கு நேர்ந்த அவமானம் இது. கலாப்ரியா யார் தெரியுமா? இன்றைய தினம் வைரமுத்து எங்கே இருக்கிறாரோ அங்கே இருக்க வேண்டியவர் கலாப்ரியா. சினிமாவைச் சொல்லவில்லை; பிரபல்யத்தைச் சொல்கிறேன். தமிழ் வாழ்வின் காதலையும், அரசியலையும் பாடிய அற்புதமான கவி அவர். ஆனால் அவர் வாழும் ஊரில் அவர் மனைவியின் பெயரைச் சொன்னால்தான் தெரிகிறது. அதுவும் அவர் ஒரு டீச்சர் என்பதால். இப்படித்தான் தமிழ் எழுத்தாளர்கள் அத்தனை பேரும் காட்டில் வாழும் ரிஷிகளைப் போல் யாருக்கும் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு விஷயம். நீங்கள் ஒரு தமிழ் எழுத்தாளனைத் தவிர வேறு யாரையேனும் இப்படித் திடுதிப்பென்று போய் அவர் வீட்டுக் கதவைத் தட்டிப் பார்க்க முடியுமா? ஒரு அலுவலக நிர்வாகி, ஒரு டாக்டர், ஒரு நடிகர் அதை விடுங்கள். என் நண்பரும் பிரபல மலையாள எழுத்தாளருமான ஸக்கரியாவை அப்படிப் பார்த்து விட முடியுமா? வருஷத்தில் பாதி நாள் வெளிநாடுகளில் சுற்றிக் கொண்டிருப்பார். உலகில் வேறு எந்த இடத்திலும் நீங்கள் ஒரு எழுத்தாளனை முன் கூட்டிய சம்மதம் இன்றி சந்தித்து விட முடியாது. நீங்கள் அவருக்கு எவ்வளவு நெருங்கியவராக இருந்தாலும் அது சாத்தியமில்லை. அவர் ஊரில் இருந்தால்தானே சந்திக்க முடியும்? பாதி நாட்கள் வெளிநாடுகளில் செமினாரில் இருப்பார்கள். மீதி நாட்கள் எங்காவது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் லெக்சர் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். தமிழ் எழுத்தாளனைத் தவிர வேறு எந்த நாட்டு எழுத்தாளனையும் உங்களால் இவ்வளவு சுலபமாக சந்தித்து விட முடியாது. ஒருநாள் அவுஸ்ரேலியாவில் இருப்பார்கள் இன்னொரு நாள் அமெரிக்காவில் இருப்பார்கள். தமிழ் எழுத்தாளன் மட்டும்தான் ஒரு நாதியும் இல்லாத அனாதை.




தமிழ் எழுத்தாளர்களுக்கு இது பற்றிய எந்தக் கவலையும் இல்லை. ஒரு சினிமா டைரக்டர் தன் வீட்டுக்குக் கார் அனுப்பினால் அதைப் பற்றி பத்து பக்கங்களுக்கு எழுதிக் களிப்புறுகிறான் அவன். அவ்வளவு பாவம் அவன்.

சமூகம் அவனைக் கீழானவன் என்றும் அடையாளம் அற்றவன் என்றும் சொல்லி சொல்லி அவனே அப்படி நம்ப ஆரம்பித்து விட்டான். அதனால்தான் ஒரு சினிமா டைரக்டர் கார் அனுப்பினால் அவன் தலை கால் புரியாமல் குதூகலிக்கிறான். இது தமிழ் சமூகத்துக்கு அவமானம்.

# செயற்கைக் கண்கள் ரெடி

உலகம் முழுவதும் சுமார் 3.9 கோடி மக்கள் பார்வைத் திறன் இன்றித் தவிக்கிறார்கள். பாதியளவு பார்வைக் குறைபாட்டோடு சுமார் 24.6 கோடி பேர் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒளியைக் காட்டும் விதமாக செயற்கை கண்களை உருவாக்கும் முயற்சி வெகு காலமாக நடந்து வருகிறது. அந்த முயற்சியின் முக்கிய மைல் கல்லாக, தற்போது அவுஸ்ரேலியாவில் முதல் செயற்கைக் கண்கள் ரெடியாகிவிட்டன. ஒரு பெண்ணுக்கு அவை பொருத்தப்பட்டுள்ளன. 20 வருடங்களாக பார்வையின்றித் தவிக்கும் அந்தப் பெண்ணின் பெயர் டயான்னி ஆஷ்வர்த். தற்போது பொருத்தப்பட்டிருக்கும் செயற்கை கண்கள் மூலம் சின்ன ஒளிக்கீற்றை தான் பார்த்ததாகச் சொல்லியிருக்கிறார் டயான்னி. அறிவியல் உலகில் இது மிகப் பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது.

காரணம், முழுக்க முழுக்க செயற்கையாக கருவிகளை வடிவமைப்பது எளிது. மனித நரம்புகளோடும் மூளையோடும் தொடர்பு ஏற்படுத்தக் கூடிய செயற்கைக் கருவிகள் சிந்தித்துப் பார்க்கவே கடினமானவை. அதனால் தான் இதுநாள் வரை அமெரிக்கா உட்பட பல நாடுகளில் விஞ்ஞானிகளின் கனவுத்திட்டமாக இருந்து வந்தது இந்த செயற்கை கண். கடைசியாக இதை



சாதித்துக் காட்டியிருக்கிறது அவுஸ்ரேலியாவின் பயோனிக் விஷன் எனும் ஆராய்ச்சி அமைப்பு. மனித விழித்திரைக்குள் பொருத்தப்படும் இந்த நுண்ணிய கருவி, 24 எலக்ட்ரோட்களால் ஆனது. சின்னஞ்சிறு கமெரா மூலம் ஒளிக்காட்சியைப் பெறும் இந்தக் கருவி, அந்த மின் காந்த சமிக்ஞைகளை நரம்பு சமிக்ஞைகளாக மாற்றி மூளைக்கு அனுப்புகிறது. சாதாரணமாக நம் கண்களில் நடக்கும் இந்தச் செயலை செயற்கையாக நடத்திக் காட்டியிருப்பதுதான் இந்தக் கருவியின் சிறப்பு.

“இது ஒரு தொடக்கம்தான். ஒரு சின்ன ஒளிக்கீற்றைத்தான் இப்போதைக்கு டயான்னியால் பார்க்க முடிந்திருக்கிறது. இன்னும் துல்லியமானதாகவும் பொருத்துவதற்கு எளிமையான கருவியாகவும் இதனை உருவாக்க வேண்டும்” என்கிறார் பயோனிக் விஷன் அமைப்பைச் சேர்ந்த டேவிட் பென்னிங்டன். அடுத்த ஆண்டில் இன்னும் சக்தி வாய்ந்ததாக, அதாவது 1024 எலக்ட்ரோட்கள் கொண்ட செயற்கைக் கண்களை உருவாக்கி பரிசோதிக்கப் போகிறார்களாம். “அப்படி தொழில்நுட்பம் முன்னேற்றம் அடையும்போதும் கூட பார்வையற்ற ஒருவருக்கு கறுப்பு - வெள்ளை பார்வையைத்தான் கொடுக்க முடியும். அதன் மூலம் அவர் யார் உதவியும் நாடாமல் நடமாட முடியும். அதுவே பெரிய வெற்றிதான்!” என்கிறார்கள் விஞ்ஞானிகள். இயற்கை போகிற போக்கில் படைக்கும் விஷயத்தை உருவாக்குவதற்கு மனிதன் எத்தனை சிரமப்பட வேண்டியிருக்கிறது.

# நெப்போலியன் மனைவி

மேற்கத்தியத் தீவுகளிலே ஒரு மீனவக் குடும்பத்தில் பிறந்தவள் அவள். மேரி ஜோசப் ரோஸ் என்பது அவள் பெயர். சுருக்கமாக ஜோசப்பைன். மாவீரன் நெப்போலியனை மணந்த ஜோசப்பைன், அவனைவிட ஆறு வயது மூத்தவள். முதல் முறையாக இருவரும் சந்தித்தபோது, அவளுக்கு, 33 வயது, அவனுக்கு 27 வயது. அவள் அப்படி ஒன்றும் அழகியல்ல. போதாக் குறைக்கு இரண்டு குழந்தைகள் வேறு.

பிரெஞ்சுப் புரட்சிக்காரர்களால் அவள் கணவன் கொல்லப்பட்டான். ஆதரவற்ற அவள், புதிய கணவனைத் தேடத் தொடங்கினாள். நெப்போலியன் அப்போது பிரபலமடைந்திருக்கவில்லை. வீரன் என்று பெயரெடுத்திருந்தான். அதை அவளும் கேள்விப்பட்டிருந்தாள். அவனை சந்திக்க முடிவு செய்து, ஒரு தந்திரம் செய்தாள். இறந்துபோன தன் கணவனின் வாளை, அவன் வாங்கிக் கொள்வானா? என்று கேட்டு வரும்படி, அவனிடம் தன் மகனை அனுப்பினாள். நெப்போலியன் சரி என்று சொல்லவே, மறுநாள் ஜோசப்பைன், அவனுக்கு நன்றி தெரிவிக்க வந்ததுபோல் கண்ணீரும், கம்பலையுமாகச் சென்று பார்த்தாள்.





மாலை, தன் வீட்டுக்குத் தேனீர் அருந்த, வருமாறு கேட்டுக் கொண்டாள் அப்படியே அவன் வந்தான். உறவு வளர்ந்தது. மூன்று மாதங்களுக்குப் பின், அவர்களின் திருமணத் தேதி நிச்சயிக்கப்பட்டது. மணமான இரண்டு தினங்களுக்கெல்லாம், இத்தாலியின் மீது போர் தொடுக்க, படை திரட்டிக் கொண்டு, புறப்பட்டு விட்டான். போர்க்களத்தில் இருந்து நாள் தவறாமல் ஜோசப்பைனுக்குக் கடிதம் எழுதி வந்தான். சாதாரணக் கடிதங்களா அவை, ஒவ்வொன்றும் காதல் காவியம்!

ஆனால், ஜோசப்பைன் அவற்றை லட்சியமே செய்யவில்லை. இன்னொருவனுடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தாள். போர்க்களத்திலிருந்த நெப்போலியனோ, பதில் கூட எழுதவில்லையே என்று பரிதவித்துக் கொண்டிருந்தான். நெப்போலியன், ஜோசப்பைனிடம் கோபம் கொள்ள, பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதுண்டு. ஆயினும், அவளிடம் அவன் கொண்ட அன்பு மட்டும் சற்றும் குறையவில்லை. தனக்கு ஒரு குழந்தை பிறக்க வேண்டுமென்பதற்காக, நெப்போலியன் ஜோசப்பைனை விவாகரத்து செய்துவிட்டு, வேறு ஒரு பெண்ணை மணக்க வேண்டியதாயிற்று. விவாகரத்து பத்திரங்களில் கையெழுத்திடும் போது, அவனுக்கு கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

பிறகு, மேரி லூசி என்பவளை மணந்தான். அவளோ, பின்னர், வேறு ஒருவனுடன் ஓடி விட்டாள். ஜோசப்பைன் இறந்தாள். நெப்போலியன் ஓடி வந்து கதறியழுதான். அப்போது சொன்னான்: "என் அருமை ஜோசப்பைன் என்னை நேசிக்கா விட்டாலும், விட்டு விட்டு ஓடியிருக்க மாட்டாள்!"

# மனித மோட்டார் சைக்கிள்கள்!





அமெரிக்காவில், சர்வதேச அளவிலான மோட்டார் சைக்கிள் கண்காட்சி நடக்கவுள்ளது. இந்தக் கண்காட்சியை பிரபலப்படுத்துவதற்காக, சான் பிரான்சிஸ்கோ நகரில் உள்ள, பிரபல விளம்பரத் தயாரிப்பு நிறுவனம், புதிய முயற்சியை கையாண்டுள்ளது.

உலகின் முன்னணி, "பொடி பெயின்டர்" என, புகழ் பெற்றுள்ள, அமெரிக்காவின் ட்ரினா மெர்ரி உதவியுடன், இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பிரபலமான யோகா நிபுணர்களை வரவழைத்து, அவர்களின் உடல்களில், பல்வேறு நிறங்களிலான பெயின்ட்டை அடித்து, மனித மோட்டார் சைக்கிள்கள் உருவாக்கப்பட்டன.

யோகா நிபுணர்கள் மட்டுமல்லாமல், சேர்க்கஸ் கலைஞர்களும், இந்தப் புதுமையான முயற்சிக்கு உதவினர். அவர்களைப் பல்வேறு கோணங்களில், அமரவைத்தும், படுக்க வைத்தும், கை, கால்களை நீட்ட வைத்தும், உண்மையான மோட்டார் சைக்கிள் போன்ற, தோற்றம் உருவாக்கப்பட்டது. இறுதியாக, அதில், மொடல்களை அமரவைத்து, புகைப்படம் பிடித்தனர்.

இந்த விளம்பரங்கள், இணையதளங்களில் வெளியாகி, பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. மிகவும் கூர்ந்து கவனித்தால் மட்டுமே, இந்த மோட்டார் சைக்கிள்கள், மனிதர்களை கொண்டு உருவாக்கப்பட்டது என்பது தெரிய வரும்.

# தூண்டிற் புழுவினைப் போல...



பாரதியார் கையில் காசில்லாத நேரங்களில் தன் மனைவியிடம் தன்னைப் பார்க்க யாரையும் அனுமதிக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்று அருந்தமிழ் கவிதைகளை எழுதுவது வழக்கம்.

பாரதியார் புதுச்சேரியில் இருந்த காலத்தில், அப்போதுதான் சிறையிலிருந்து வெளி வந்த தியாகி மாடியில் பாரதியார் இருக்கிறார் என்பதை அறிந்து மாடிப்படிகளில் ஏறிப்போனார்.

இருவரும் நேருக்கு நேர் பார்த்து மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தனர். அப்போது பாரதி தான் எழுதி முடித்த "தூண்டிற் புழுவினைப் போல்" என்று தொடங்கும் பாடலை தன்னைப் பார்க்க வந்தவரிடம் உரக்கப் படித்துக் காட்டினார். அந்தத் தியாகிதான் வ.வே.சு. ஐயர்.

# கடவுள் இல்லாத காலம்

ஓரிடத்தில் ஒரு இந்தியர், ரஷ்யர், அமெரிக்கர் மூவரும் கூடி, இறைவனை பிரார்த்தித்தனர். கடவுள் தோன்றினார். ரஷ்யர், "ரஷ்யா எப்போது முன்னேறும்?" என்று கேட்டார். "இன்னும் 50 ஆண்டு ஆகும்" என்றார் கடவுள். "அதைப் பார்க்க நான் இருக்க மாட்டேனே" என்று கூறி அழுதார், ரஷ்யர்.

அடுத்து, அமெரிக்கரும் அவ்வாறே கேட்க, கடவுள், "இன்னும் 50 ஆண்டு ஆகும்" என்றார். அமெரிக்கர் அழுதுகொண்டே, "அவ்வளவு காலம் வாழ்ந்து நான் அதைப் பார்க்க முடியாதே!" என்றார்.

கடைசியாக இந்தியர், "எங்கள் இந்தியா எப்போது முன்னேறும்?" என்று கேட்டது தான் தாமதம், கடவுள் அழுது கொண்டே, "அதைப் பார்க்க நான் இருக்க மாட்டேனே..." என்றார்.

**(காமராஜர் பற்றி இளசை சுந்தரம் எழுதிய நூலில்)**

# ஒரு காதல் கதை!

**- எல். குரு -**

டாக்டரின் வீட்டுக் கதவை ஒருவர் தட்டினார். அவர்கள் ஆறு பேர் வந்திருந்தார்கள். டாக்டர் கதவைத் திறந்துகொண்டு தட்டுத் தடுமாறி வந்தார்...

டாக்டர், சிறந்த அறுவைச் சிகிச்சை நிபுணர் என்று பெயர் பெற்றவர். அவரைப் பார்த்ததுமே அனைவரும் குதூகலமாகக் கூச்சல் போட்டார்கள். எல்லாருமே எழுபது வயதைத் தாண்டியவர்கள்...டாக்டர் உள்பட.

"டாக்டர்! இன்று நாங்கள் எல்லோருமே உயிருடன் இருக்கிறோம் என்றால் அது உங்களால்தான். நாங்கள் அனைவருமே உங்கள் அறுவைச் சிகிச்சைக்கு ஆளாகி இருக்கிறோம்"

"மெத்த மகிழ்ச்சி. உள்ளே வாருங்கள்!" என்று டாக்டர் அழைத்துச் சென்றார். அனைவரும் கணப்பருகே அமர்ந்தனர். டாக்டரைப் பார்க்க வந்தவர்கள் உயர்ந்த வகை மதுப்புட்டிகளைக் கொண்டு வந்திருந்தார்கள். அனைவரும் மகிழ்ச்சியுடன் மது அருந்திக் கொண்டே பேசத் தொடங்கினார்கள்.

"உங்களுக்கு ஒரு விசித்திரமான கதை ஒன்றை சொல்லப் போகிறேன்" என்று டாக்டர் ஆரம்பித்தார்.

☆☆☆☆☆☆

புகைப்படக் கலை அப்போதுதான் தோன்றியிருந்தது. இளைஞன் டெக்ரான் புகைப்படக் கலையில் நன்றாகத் தேர்ச்சி பெற்றான். ஸ்டாண்ட் போட்டு நிறுத்தும் தன் கமெராவைத் தூக்கிக் கொண்டு சந்தை கூடும் இடத்திற்கு வந்துவிடுவான்.

"ஐயா! வாங்க! அம்மா! வாங்க! என்றும் ஞாபகார்த்தமாக இருக்கும். ஒரு படம் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டு தன் வசீகரமான சிரிப்பைக் காட்டுவான்.

எப்படிப் போஸ் கொடுப்பது என்று சொல்லிக் கொடுப்பதில் நிபுணன். அவனது புகைப்படங்கள் அருமையாக அமைந்து இருந்ததால் நிறையப் பேர் போட்டோ எடுக்க வந்தார்கள்.

இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், அவன் சந்தை கூடும் இடத்திற்கு ஓர் ஒட்டகத்தின் மேல் சவாரி செய்து கொண்டுதான் வருவான். கரும்பச்சை நிறமுள்ள அந்த ஒட்டகம் ரெட்டைத் திமில் கொண்டது. பார்க்க அழகாக இருக்கும். எங்கிருந்தோ அதை அவன் விலைக்கு வாங்கி வந்திருந்தான்.

படகுச் சவாரியில் அவனுக்கு மிகுந்த விருப்பம். அடிக்கடி கடலில் படகுப் பயணம் செய்வான். ஒரு முறை அவன் படகுப் பயணம் சென்றபோது நீரில் இருந்த ஒரு கண்ணி வெடி வெடித்துத் தூக்கி எறியப்பட்டான். எப்படியோ கரைக்குத் தூக்கி வந்து மருத்துவமனையில் சேர்த்தார்கள். உடம்பெல்லாம் காயம். உடனே அறுவைச் சிகிச்சை செய்தாக வேண்டும்.

அவனைப் பரிசோதித்துவிட்டு, ஒபரேஷன் 'செய்தால் டெக்ரான் பிழைக்க மாட்டான் என்று நான் சொன்னேன்.

என் சக டாக்டர்கள் என் கையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினார்கள்! "எப்படியும் டெக்ரானை நீங்கள் காப்பாற்றித்தான் ஆக வேண்டும், இந்தப் பட்டணத்து மக்கள் அனைவராலும் அதிகமாக நேசிக்கப்படும் ஆத்மா இவன்! இவன் இறந்து போனால் பொதுமக்கள் நம்மை உலுக்கி எடுத்துவிடுவார்கள்!"

எனக்கென்னமோ ஒபரேஷன் செய்தாலும் ஒன்றுதான் செய்யாவிட்டாலும் ஒன்றுதான் என்று தோன்றியது! கைராசிக்கார மருத்துவன் என்ற கீர்த்தியைப் பெற்றிருந்த நான் மனதை திடப்படுத்திக்கொண்டு அறுவைச் சிகிச்சையை செய்தேன்.

டெக்ரானை கவனித்துக் கொள்ள அவனது தாயார் மட்டுமே வந்திருந்தார். அழகான டெக்ரானுக்கு இன்னும் திருமணம் நடக்கவில்லை. அவன் தாயார் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள். "டாக்டர்! என் மகன் பிழைப்பானா?" என்று நொடிக்கொரு முறை கேட்டுக் கொண்டிருந்தாள்.

உன் மகன் பிழைக்கமாட்டான் என்று ஒரு தாயாரிடம் எப்படிச் சொல்லுவேன்?

நள்ளிரவு பன்னிரண்டு மணி இருக்கும். தேவதை மாதிரி ஒரு பெண் அறைக்குள் நுழைந்தாள். நான் டெக்ரான் படுத்திருந்த கட்டிலின் அருகில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தேன்.


"டாக்டர்! இன்றிரவு நான் டெக்ரானைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்" என்றாள்

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"இரவு கல்யாணம் செய்து கொண்டு மறுநாள் காலை விதவை ஆகப் போகிறாயா?" என்று நான் வருத்தத்துடன் கேட்டேன்.

"எது எப்படியோ? இன்றிரவு நான் இவரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவது மட்டும் நிச்சயம்! என் அன்பில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது" என்றாள்.

**(அண்மையில் நடந்த ஐரோப்பியப் பட விழாவில் பங்கெடுத்துக் கொண்ட SOMETHING MORE ABOUT LOVE (2010) என்ற பல்கேரியத் திரைப்படத்தின் கதை இது. படத்தின் இயக்குநர்: மெகதலினா ரால்செவா)**



இந்த ஆழ்ந்த காதலின் ஆணி வேரைக் கண்டுபிடிக்க எனக்கு ஆசையாக இருந்தது! அந்தப் பெண்ணின் பெயர் மெல்வின்! அவள் அவர்களின் தீவிரக் காதல் கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

அந்தப் பட்டணத்தில் கார்னிவல் நடந்து கொண்டிருந்தது. கார்னிவலை ஒட்டி ஒரு பொருட்காட்சி. நல்ல கூட்டம் பல கடைகள். துப்பாக்கி சுடும் இடத்தில் மெல்வின் நின்றுகொண்டிருந்தாள். காசு கொடுத்து டோக்கன் வாங்கி சரியாகப் பலூனை சுட்டுவிட்டு ஒரு கரடிப் பொம்மையை பரிசாகப் பெற்றுக் கொண்டான் டெக்ரான். மறுபடியும் டோக்கன் வாங்கினான்.

"இது என்ன? சின்னப் பிள்ளைகளுக்குப் பரிசு கொடுக்கிற மாதிரி கரடிப் பொம்மை! நான் துப்பாக்கியால் சரியாகச் சுட்டுவிட்டால் ஒரு முத்தம் பரிசாகக் கொடுக்கிறேன் என்று சொல்! அதற்கு சம்மதம் என்றால் துப்பாக்கியை எடுக்கிறேன். இல்லை என்றால் வேண்டாம்" என்று டெக்ரான் கறாராகச் சொன்னான்.

நாணத்துடன் தன் சம்மதத்தைச் சொன்னாள் மெல்வின். உற்சாகத்துடன் சரியாகச் சுட்டுவிட்டான் டெக்ரான். அடுத்த கணமே இருவரும் முத்தமிட்டார்கள்.

இரண்டு மணி நேரத்திற்குள் ஆண்டாண்டுக் காலம் ஒன்றாகப் பழகிய ஜோடி போல் ஆகிவிட்டார்கள். மெல்வின் ஒரு சேர்க்கஸ் கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். அங்குதான் டெக்ரான் இந்த ரெட்டைத் திமில் ஒட்டகத்தைப் பார்த்தான். மெல்வின் ஞாபகார்த்தமாக அதைப் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டான். நிச்சயம் அவன் ஊருக்கு வந்து, அவனைக் கல்யாணம் செய்து கொள்வதாக மெல்வின் வாக்குக் கொடுத்தாள்.

☆☆☆☆☆☆

"டாக்டர்! என்னை இவருடன் தனியே இருக்க அனுமதியுங்கள்! நான் இவருடன் ஆத்மார்த்தமாகப் பேசப் போகிறேன்" என்று கண்களில் நம்பிக்கையுடன் சொன்னாள்.

"அம்மா புண்ணியவதி! நீ ஏதாவது நாட்டு மருந்து கொடுத்து அவனை சீக்கிரம் மேலே அனுப்பிவிடாதே!" என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே சுரணை அற்றிருந்த டெக்ரானின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவள் கொஞ்சிப் பேசத் தொடங்கினாள்.

"அன்பே! இப்போதே நாம் கல்யாணம் செய்துகொள்ளலாம். நாம் ஆனந்த வாழ்க்கை நடத்துவோம் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நம் முதல் இரண்டு குழந்தைகளும் ஆண் குழந்தைகள்தான். அவர்களுக்கு என்ன பெயர் வைப்பது என்று கூட நான் நிச்சயம் செய்துவிட் டேன்!" என்று சொல்லிக்கொண்டே கண்ணீர சிந்தினாள். என்னாலும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

☆☆☆☆☆☆

"சூரியக் கதிர்கள் என் முகத்தை முத்தமிட்டபோது ஒரு தவிப்புடன் எழுந்து டெக்ரானின் படுக்கை அறையை நோக்கி ஓடினேன். அதிசயமான காட்சி! ஆச்சரியம்! ஆனால் உண்மை! டெக்ரான் படுத்தபடியே மெல்வினுடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான்.

சத்தியமாகச் சொல்கிறேன் டெக்ரானைக் காப்பாற்றியது என் அபார மருத்துவத் திறமை அல்ல... மெல்வினுடைய ஆழ்ந்த அபரிமிதமான காதல்தான்! மரணத்தை வென்ற மாதரசி அவள்!" என்று முடித்தார் டாக்டர் ருமனோவ்.




# ஒரு கம்பளிப்பூச்சியின் கதை

- எஸ். கருணா

**நமது** இதிகாசங்களும் புராணங்களும் இன்னபிற பண்பாட்டுச் சாதனங்களும் ஆண்களின் பொதுப்புத்தியிலும் பெண்களின் பொதுப்புத்தியிலும் மிகுந்த சூழ்ச்சியோடு ஏற்றி வைத்திருக்கும் கருத்துக்களில் ஒன்றுதான் 'கல்லானாலும் கணவன்..புல்லானாலும் புருசன்' என்பது. இதை ஒரு கருத்தாகவன்றி தங்களின் வாழ்க்கைத் தத்துவமாகவே நமது பெண்கள் வரித்துக்கொண்டு விட்டனர்.

கருத்தால் அடக்கிவைத்திருக்கும் பெண்களை, கரத்தாலும் அடக்கி ஒடுக்குகிற கொடுமை வரலாறு நெடுகிலும் நடந்தேறி வந்திருக்கிறது. ஆதியில் காடுபிடிக்க நடந்த மோதல்களிலும் பின்னர் நாடு பிடிக்க நடந்த போர்களிலும் முதல் களப்பலியானது பெண் இனம்தான். போர்களின் வன்முறைக்கும், அதன் பேரால் நிகழ்த்தப்பட்ட பாலியல் கொடுமைக்கும் ஆளான பெண்களின் துயரமிக்க பாடல் இன்னமும் ஒலித்துக்கொண்டு தானிருக்கிறது. அந்த ஓலத்திற்குமிடையே அவர்கள் குடும்பத்தையும் தூக்கிச் சுமக்கிறார்கள். என்ன துயரம்தானென்றாலும் அவர்கள் கணவனுக்கான கடமைகளையும் செய்துதான் தீரவேண்டும் என்று சமூகம் விதி செய்து வைத்திருக்கிறது.

இந்த சமூக விதியை நிறைவேற்றவேண்டிய நெருக்கடிக்கு ஆளாகும் ஒரு ஜப்பானியப் பெண்ணின் மனப்போராட்டங்களை அதிர வைக்கும் காட்சிகளுடன் பதிவுசெய் திருக்கும் படம்தான் CATERPILLAR.

1940 ஆம் ஆண்டில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே இரண்டாவது யுத்தம் நடந்து கொண்டிருக்கும் சமயம் அது. அப்போது ஜப்பானியக் கிராமங்களிலிருந்து போர்முனைக்கு இராணுவ வீரர்களை அனுப்பிக்கொண்டேயிருக்கிறார்கள். அது ஒரு உணர்வுபூர்வமான சடங்காகவே நடக்கிறது. ஊரே ஒன்றுகூடி தங்கள் கிராம வழக்கப்படி புதிய வீரனை போர் முனைக்கு வழியனுப்பிவைக்கிறார்கள்.

அப்போது ஒருநாள் போர்க்களத்திலிருந்து இராணுவத் தளபதி குரோகாவாவை அவனது கிராமத்திற்கு திரும்ப கொண்டுவருகிறார்கள். போரில் இரண்டு கைகளையும் இரண்டு கால்களையும் இழந்துவிட்ட குரோகாவாவை சகவீரர்கள் தூக்கிவந்து அவனது வீட்டில் வைக்கிறார்கள். கூடவே போரில் அவன் பெற்ற பதக்கங்களையும், அவனது போர் சாகசம் பற்றிய செய்திகளடங்கிய புகைப்படத்தையும் கொண்டுவந்து வைத்துவிட்டு மரியாதை செலுத்திவிட்டுச் சென்று விடுகின்றனர். கைகால்கள் வெட்டப்பட்டு முண்டமாகக் கிடக்கும் குரோகாவைக் கண்டு அவனது மனைவி ஷிகேகோ அதிர்ச்சியடைகிறாள். அவனது அந்தக் கோலத்தை காணச் சகிக்காமல் வீட்டை விட்டு வெளியே ஓடுகிறாள். சேற்றில் விழுந்து புரண்டு கதறிக்கதறி அழுகிறாள். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களும் அவளது கணவனின் சகோதரனும் அவளை ஆறுதல்படுத்துகின்றனர்.

'குரோகாவா இப்போது போர்க்கடவுள் ஆகிவிட்டான். அவனை நன்கு பராமரிக்க வேண்டியது மனைவியாகிய உனது கடமை. இது ஒரு புனிதமான பணி. இந்த வாய்ப்பு வேறு யாருக்கும் கிடைக்காது. இந்தப பணியை நன்றாகச் செய்து நல்ல மனைவியாக நடந்து கொள்..." என்று ஊர்மக்கள் ஷிகேகோவுக்கு புத்திமதி சொல்கின்றனர். அதோடுகூட அவனை போர்க்கடவுளாகவும் கொண்டாடி மகிழ்கின்றனர். போர்க்கடவுளாகிவிட்ட தன் கணவனை, ஷிகேகோ எப்படி கவனித்துகொள்ளப் போகிறாள், மனைவிக்கான தனது கடமையைச் சரியாக நிறைவேற்றுவாளா, அதன்மூலம் நாட்டுக்கும் நாட்டின் மன்னருக்கும் எப்படி மரியாதை செய்யப்போகிறாள்' என ஊரே அவளின் செயற்பாடுகளை உன்னிப்பாகக் கவனிக்கிறது.

போரில் கைகால் போனது மட்டுமன்றி, தொண்டை அறுபட்டதால் அவனால் பேசவும் முடியாது. சகிக்க முடியாத ஒருவித ஒலியைமட்டுமே அவனால் எழுப்பமுடிகிறது. சிறுநீர் கழிக்கவும், மலம் கழிக்கவும்கூட அவனுக்கு பிறரின் உதவி தேவை என்ற நிலைதான். எப்போதும் படுக்கையில் கிடந்தபடியே, தனக்கு வழங்கப்பட்ட பதக்கங்களையே வெறித்துப் பார்த்தபடியே கிடக்கிறான். ஆனால் அவனுக்கு எப்போதும் பசித்தபடியே இருக்கிறது. அதைப் புரிந்து கொள்ளும் ஷிகேகோ, அவனுக்கு உணவைப் புகட்டுகிறாள். எவ்வளவு சாப்பிடடாலும் அவனுக்கு மீண்டும்மீண்டும் பசிக்கிறது. அவளும் அதை உணர்ந்து உணவைத் தந்துகொண்டே இருக்கிறாள். ஆனாலும் அவனது தீராப் பசியைப் போக்க வழிதெரியாமல் தவிக்கிறாள்.

> தங்கக்கரடி விருதினைப் பெற்ற இந்தப்படம், போர் பற்றிய பெருமிதங்களைக் கேள்விக்குள்ளாக்குகிறது. போர்க்காலத்திலும் அமைதிக் காலத்திலும் ஜப்பானியப் பெண்களின் மீது திணிக்கப்பட்ட நியாயமற்ற பொறுப்புகளையும் இப்படம் கேள்வி கேட்கிறது. படம் நெடுகிலும் கோமாளியைப் போன்று எக்காளம் முழங்கிய படியே வலம்வரும் ஒரு பாத்திரத்தை அந்த மக்களின் மனசாட்சியாகவே கொள்ளத்தோன்றுகிறது. அப்பாத்திரம் போர் குறித்த விமர்சனங்களை படம் முழுவதும் கிண்டலுடன் முன்வைக்கிறது. படத்தில் வரும் போர்க்கடவுள் பிம்பத்தை அப்பாத்திரம் கேலி செய்து ஒன்றுமில்லாமல் ஆக்கி விடுகிறது.

வயிற்றுப்பசி தீர்ந்தவுடன் அவனுக்கு உடல்பசி கிளம்புகிறது. போர்க்களத்தில் அவன் வன்புணர்ச்சி செய்த காட்சிகள் நினைவுக்கு வந்து அவனுக்குள் காமத்தைக் கிளறுகிறது. காமம், பசி இரண்டும் அவனைப் புரட்டியெடுக்கிறது. அவளும் அதை புரிந்துகொள்வதுடன், வேறு வழியும் இல்லாததால் அதை ஒரு கடமையாக நிறைவேற்றித்தருகிறாள். ஒரு சந்தர்ப்பத்தில் அவனது பாலியல் தேவைக்கு அவள் ஒத்துழைக்கத் தயங்கும்போது, அவன் அவளைத் தாக்க முயற்சிக்கிறான். ஆனால் கைகால் இல்லாததால் தாக்க அவனால் முடியவில்லை. அவனது மனவோட்டத்தை புரிந்து கொள்ளும் அவள், "என்னை அடிக்க வேண்டும் போல இருக்கிறதா.. அதற்குத்தானே உள்ளுக்குள் ஆசைப்படுகிறாய்.. உன்னால் முடிந்தால் அடித்துக் கொள்.." என்று ஆவேசமாகக் கத்துகிறாள்.

கைகால்கள் இழந்து முற்றிலும் மனைவியைச் சார்ந்தே உயிர்பிழைக்க வேண்டியிருந்தாலும்கூட குரோகாவாவின் குரூரப் புத்திமட்டும் அப்படியேதான் இருக்கிறது. ஏற்கனவே குழந்தையின்மையை காரணம் காட்டி ஷிகேகோவை பலமுறை சித்ரவதைப்படுத்தியவன்தான் அவன். இப்போதும் அந்தப் புத்தி மாறவில்லை. அவனது குரூரத்தைப் புரிந்துகொள்ளும் ஷிகேகோ அதற்காக அவனைப் பழிவாங்க நினைக்கிறாள்.

என்னதான் போர்க்கடவுளாக ஊர் உன்னைக் கொண்டாடினாலும் எனக்கு நீ வெறும் சதைப்பிண்டம் தான் என்பதை அவனுக்கு உணர்த்த விரும்புகிறாள். அதற்காக அவனுக்கு இராணுவ உடைகளை அணிவித்து ஒரு தள்ளுவண்டியில் வைத்து தான் செல்லுமிடத்திற்கெல்லாம் அழைத்து செல்கிறாள். ஆரம்பத்தில் எல்லாரும் அவனுக்கு வணக்கம் செய்வதைக் கண்டு மகிழ்ச்சியடையும் அவன், பின்னர் தன்னை அவமானப்படுத்துவதற்காகத்தான் இப்படி அழைத்துச செல்கிறாள் என நினைத்து அவளுடன் செல்ல மறுக்கிறான்.

பசி, கோபம், காமம், மனைவி மீதான வெறி, போர்முனையில் தான் வன்புணர்ச்சி செய்து சிதைத்த பெண்களின் ஓலக்குரல் எல்லாமும் சேர்ந்து அவனை சித்திரவதை செய்கின்றன. தன் எதிரே வைக்கப்பட்டிருக்கும் பதக்கங்களும், பாராட்டுச் சான்றிதழ்களும் அவனது நிம்மதியைக் குலைக்கின்றன. இதனால் மிகுந்த மனவேதனைக்குள்ளாகும் குரோகாவா, தனது மனைவி வெளியில் சென்றிருக்கும் நேரம் பார்த்து தற்கொலை செய்துகொள்கிறான். ஒரு கம்பளிப்பூச்சியைப் போல ஊர்ந்து சென்று வீட்டின் வெளியே உள்ள ஒரு குட்டையில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்கிறான். ஒரு செத்த கம்பளிப் பூச்சியைப் போல அவன் உடல் மிதக்கிறது. அடுத்த காட்சியில் படத்தில் வரும் கோமாளி ஒருவன் 'போர் முடிந்தது' என உரக்க கூவியபடியே செல்வதுடன் படம் நிறைவடைகிறது.

2010 ஆம் ஆண்டில் வெளியான இப்படத்தை இயக்கியவர், ஜப்பானின் முன்னணி இயக்குனர்களில் ஒருவரான கோஜி வாக்காமாட்சு. அறுபதாவது பெர்லின் திரைப்பட விழாவில் தங்கக்கரடி விருதினைப் பெற்ற இந்தப்படம், போர் பற்றிய பெருமிதங்களைக் கேள்விக்குள்ளாக்குகிறது. போர்க்காலத்திலும் அமைதிக்காலத்திலும் ஜப்பானியப் பெண்களின் மீது திணிக்கப்பட்ட நியாயமற்ற பொறுப்புகளையும் இப்படம் கேள்வி கேட்கிறது.


போரிலும் போருக்குப் பின்னும் பெண்கள் எவ்வாறு அலைக்கழிக்கப்படுகின்றனர் என்பதைப்பறறியே படம் வலுவாகப் பேசுகிறது. படம் நெடுகிலும் கோமாளியைப் போன்று எக்காளம் முழங்கியபடியே வலம்வரும் ஒரு பாத்திரத்தை அந்த மக்களின் மனசாட்சியாகவே கொள்ளத்தோன்றுகிறது. அப்பாத்திரம் போர் குறித்த விமர்சனங்களை படம் முழுவதும் கிண்டலுடன் முன்வைக்கிறது. படத்தில் வரும் போர்க்கடவுள் பிம்பத்தை அப் பாத்திரம் கேலி செய்து ஒன்றுமில்லாமல் ஆக்கி விடுகிறது.

தனது கணவன் குரோ காவாவை ஒரு தள்ளுவண்டியில் வைத்து அவன் மனைவி தள்ளிக் கொண்டுவருகிற காட்சி, நமக்கு நமது நளாயினியைத்தான் ஞாபகப் படுத்துகிறது. உலகெங்கிலும் பெண்க



ளுக்கு இழைக்கப்படும் அநியாயங்கள் ஒரேமாதிரியாகத்தான் இருக்கும் என்பதற்கு வேறென்னசாட்சி வேண்டியிருக்கிறது. ஒரு கம்பளிப் பூச்சி நம்மீது விழுந்தாலோ..அல்லது கணநேரம் ஊர்ந்து போனாலோகூட நம்மால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. பதறியடிக்கிறோம். என்னவோ ஏதோ என அலறித்துடிக்கிறோம். ஆனால அப்படியான ஆண்களோடு வாழ்நாள் முழுதும் வாழ்ந்துதீர்க்க வேண்டிய காலக்கொடுமையின் கைகளில் ஒப்புக் கொடுத்துவிட்ட நம் பெண்களின் அதன் முதல்படியாகக்கூட இந்தப்படத்தை தேடிப் பிடித்துப் பார்க்கலாம்.

# பொன்னாலையில் மீள்குடியேறியோர் அமைச்சருக்கு புகழாரம்



மக்களுக்கு வாக்குறுதிகள் பலராலும் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் சொன்னதையே செய்பவராகவும், செய்வதையே சொல்பவராகவும் ஒருவர் இருக்கின்றார் என்றால் அவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே அதற்குத் தகுதியானவராக உள்ளார் என பொன்னாலை மக்கள் பிரதிநிதி சிவராசா தெரிவித்தார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு முன்றலில் அமைந்துள்ள கண்ணன் மடாலயத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற கடற்படையினரிடமிருந்து வீடுகளை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்:

ஏற்கனவே இவர் பல வாக்குறுதிகளை வழங்கியது மட்டுமல்லாமல் அவற்றை சொன்னதற்கேற்ப நிறைவேற்றியும் தந்துள்ளார் என்பதுடன் இன்றைய தினமும் மக்கள் பிரதிநிதிகளாகிய எம்மால் பல்வேறு கோரிக்கைகளும் அவரிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் ஆராய்ந்து துறைசார்ந்தவர்கள் ஊடாக விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதிமொழி வழங்கியுள்ள நிலையில் சொன்னதையே செய்பவர் செய்வதையே சொல்பவர் என்ற அவரது வாக்குறுதிக்கேற்ப நிச்சயம் பெற்றுத்தருவார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், மக்களது பிரச்சினைகள், கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் அதே வேளை, நான் மக்கள் பிரதிநிதியாகவும், அரசாங்கப் பிரதிநிதியாகவும் இருக்கின்றபடியால் உரியதீர்வினைப் பெற்றுத்தருவேன். கடற்படையினர் சில அறிவுறுத்தல்களை உங்களுக்கு வழங்கியிருந்தாலும் அவை தொடர்பிலும் ஆராய்ந்து துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி தீர்வு காணப்படுமென்றும், கடற்படையினரின் அறிவுறுத்தல்கள் இப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கு ஒருபோதும் தடையாக இருக்க முடியாது என்றும், படைத்தரப்பினர் தவறுசெய்யும் பட்சத்தில் தமது கவனத்திற்குக் கொண்டு வரும் போது அதுதொடர்பில் ஆராய்ந்து இறுதிமுடிவெடுக்கப்படுமென்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

இதனிடையே மக்கள் பிரதிநிதிகளால் பல்வேறு பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டன. குறிப்பாக பாண்டவெட்டைப்பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மண்அகழ்வை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்த அமைச்சர் அவர்கள், காட்டுப்புலம் துறைமுகத்தை ஒன்றரை மாதத்திற்குள் மீளப் பெற்றுத்தருவதற்கும், ஏனைய கோரிக்கைகள் தொடர்பில் தமக்கு ஒருமாதகால அவகாசம் தேவையென்றும் அதுவரையில் பொறுமை காக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இதில் பொன்னாலை பகுதியிலுள்ள 19வீடுகளின் திறப்புகள் அவற்றின் உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டதுடன், சம்பிரதாயபூர்வமாக வீடொன்றும் அதன் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் சோதிநாதன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன், ஈ.பி.டி.பியின் வலிகாமம் அமைப்பாளர் ஜீவன், ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் ஜீவா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.





வலி தென்மேற்கு பிரதேச சபையின் புதிய கட்டடத்திற்கான பால்காய்ச்சும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது பிரதேச சபை செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆலயத்திலிருந்து சுவாமி படங்கள் எடுத்து வருவதையும் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் நடராசா மங்கள விளங்கேற்றுவதையும் காணலாம்.

(109)

# வவுனியா கலாசாரப் பேரவையின் கலை இலக்கிய விழா நாளை

(வவுனியா)

வவுனியா பிரதேச கலாசாரப்பேரவை மற்றும் வவுனியா பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் பிரதேச கலை இலக்கிய விழா நாளை வியாழக கிழமையும் மற்றும் 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முதலாம் நாளான வியாழக்கிழமைமாணவர்களின் கலை தெரி அரங்கம் எனும் தொனிப்பொருளில் தமிழ்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளார் அரங்கில் பாடசாலை மாணவர்களுக்கான இலக்கிய நிகழ்வுகள் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது:

இதன்போது பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே. பந்துலகரிச்சந்திரா சிறப்பு விருந்தினராக வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சரஸ்வதி மேகநாதன் கௌரவ விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியல், கல்லூரியின் பீடாதிபதி க. பேணாட், வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, வவுனியா வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் பிரதேச செயலாளர் அ. சிவபாலசுந்தரன் தலைமையில் கலைஞர் சுவைஞர் அரங்கம் எனும் தொனிப் பொருளில் வட்டூர் கவிஞர் சித்தாந்த வித்தகர் கதிர் சரவணபவன் அரங்கில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பிரதம விருந்தினராக கைத்தொழில மற்றும் வணிக அமைச்சர் ரிசாட் பதியுதீன் சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திரா கௌரவ விருந்தினராக வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க. பரந்தாமன் வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் எஸ். ஜானக, செட்டிகுளம் பிரதேச செயலாளர் நா.கமலதாசனும் வவுனியா கமநல சேவைகள் உதவி ஆணையாளர் திருமதி சுலோஜினி குகனும் வவுனியா நகரசபை செயலாளர் வீ. வசந்தகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.


இலச்சினை வடிவமைத்த திருமதி ஆர். எச். ஏ. ஜெனகா, திருமதி பி.பி. திசானி பிரபா சமரசிங்க ஆகியோரும் சாகித்தியமண்டல பரிசு பெற்ற க.ஶ்ரீகந்தவேளும் 2011 ஆண்டு கலா பூசணம் விருது பெற்ற க. கனகேஸ்வரன் மற்றும் ச. கண்முகநாதன் ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(160)

# ஆயுர்வேதம்

## சரக சமஹிதை-1

– நரோபா




ஆற்றங்கரையோரம் பிரம்மாண்டமாக கிளை பரப்பி நிற்கும் ஆலமரத்தடியில் நீள்சடையும் வெண்தாடியும் புரள அமர்ந்திருந்தார் வெள்ளுடை தரித்த அந்த ரிஷி, கூடியிருக்கும் ஆறு சீடர்களும் விடை பெறும் நாளன்று. யுகம் யுகமாக பெருமௌனத்தில் ஆழ்ந்திருந்த கரும்பாறை உயிர் பெற்று உதிர்க்கும் முதல் சொல்லைப்போல் தன் அகத்தின் ஆழத்திலிருந்து வார்த்தையை துழாவி மௌனத்தை துளைத்தார் குருநாதர் "விதைகள், நீங்கள் அறுவரும் ஆறு ஆலம் விதைகள், முளைத்தெழுந்து வனமாகுங்கள், களைத்தோருக்கு நிழல் தாருங்கள், அலைவோருக்கு அடைக்கலம் ஆகுங்கள்,"... தலைகுனிந்து விசும்பும் சீடர்களை நோக்கிச் சலனமின்றி பேசினார், "இதுவே உங்கள் இறுதி வேள்வி. நீங்கள் அனைவரும் எனக்குச் சமமெனினும் - வான்மழை சமமாக பொழிந்தாலும் நாழியின் ஆழம் பொறுத்தே நீர் தங்கும், இது உங்களுக்கான சோதனை, உங்கள் ஆழத்தைக் கண்டுகொள்ள, உங்களை நீங்களே அறிந்துகொள்ள, பிணி நீக்கும் மருந்துவத்திற்குப் பயன்படாத பொருளொன்றை ஒரு யாமத்திற்குள் கொண்டு வாருங்கள். காரியம் சித்தியடையட்டும்", கண்மூடி மென்முறுவலுடன் காத்திருந்தார் குரு.

கரும்பாறை ஒன்றை உருட்டிக்கொண்டு வந்தான் ஒருவன், வனமெங்கும் புதராக மண்டிக்கிடக்கும் களைசெடியை பிடுங்கிக்கொண்டு வெற்றி புன்னகையுடன் திரும்பினான் மற்றொருவன், மரமேறி நச்சுமிழும் பழம் பறித்துக்கொண்டு வந்தான் மற்றொருவன், கழுகுகள் உண்டழித்த அழுகிய சதைபிண்டத்திலிருந்து செந்நாய் மண்டையோட்டை கொணர்ந்தான் மற்றொருவன், ஆற்றுப்படுகையில் தொண்டையூதி கனைத்துக் கொண்டிருந்த உயிர் தவளைகளை கொண்டு வந்தான் மற்றொருவன், தத்தமது கண்டுபிடிப்புகளை எண்ணி புளகாங்கித பெருமை அவர்கள் கண்களை நிறைத்தன. சரிந்து அலைந்து திரிந்து வியர்த்து வெறும் கையுடன் திரும்பினான் ஆறாமவன், ஏளனப் பார்வைகள் சூழ குருவின் முன் வந்து நின்றான். பார்வையில் குரு எழுப்பிய வினாவிற்கு வார்த்தைகளில் பதிலளிக்கிறான் சீடன், "குருவே, மன்னியுங்கள், மருந்திற்கு பயன்படாத எதையுமே என்னால் கண்டுகொள்ள முடியவில்லை, நான் கற்றுத் தேரவில்லை" என்று குருவின் காலடியில் அழுது பிதற்றுகிறான். புன்னகையுடன், "நீ ஒருவனே பரீட்சையில் தேறியவன்" என்று ஆசீர்வதிக்கிறார் குரு.

பஞ்சமகா பூதங்களின் சேர்க்கையில் உருவானதே இந்த பிரபஞ்சம். அண்டத்தில் உள்ளதுதான் பிண்டத்திலும். இந்த ஊனுடலும் பஞ்சமகாபூதத்தில் உருவானதே. இதில் சஞ்சரிக்கும் முக்குற்றங்களான வாத, பித்த, கபங்களும் பஞ்சமகாபூதங்களால் ஆனதே. புறச் சலனங்கள் மனிதனுக்குள்ளும் சலனங்களை ஏற்படுத்துகின்றன. பிரபஞ்சப் பேரிருப்பில் மனிதனும் ஒரு கண்ணியாகிறான். சீர்குலைவுகள் நோயாகின்றன, சமநிலையே ஆரோக்கியம். ஆனால், முழுமையான சமநிலை என்று ஏதேனும் உண்டா? துல்லியமான சமநிலை என எதுவுமே இல்லை, சார்புத்தன்மைக் கொண்ட சமநிலைதான் சாத்தியம். தோஷங்களின் முரணியக்கத்தில் கைகூடும் சமநிலையே ஆரோக்கியம்.

மேற்சொன்ன இந்தக்கதை ஆத்ரேயரையும் அவருடைய ஆறு சீடர்களான, அக்னிவேஷர், பேளர், ஜதுகர்னர், பராசரர், ஷாரிதர், க்ஷாரபாணி பற்றியது என்று சொல்வார்கள். அந்த சீடர் குழாமில் தலைசிறந்து தனித்து விளங்கிய ஒருவர்தான் ஆயுர்வேத மூல நூல்களில் ஒன்றான சரக சம்ஹிதையை உரு வாக்கிய சரகரின் ஆதி குருவான அக்னிவேஷர். அக்னிவேஷர் இயற்றிய மருத்துவ நூலை தொகுத்து உருவாக்கப்பட்டதே சரக சம்ஹிதை. சரகர் முடிக்காத பகுதிகளை த்ருடபலர் பூரணம் செய்தார் என்று சம்ஹிதையின் சில அத்தியாயங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, வெவ்வேறு காலகட்டத்தை சேர்ந்த அக்னிவேஷர், சரகர், த்ருடபலர் என மூவர் சரக சம்ஹிதையின் உருவாக்கத்தில் பங்களிப்பாற்றியுள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

(தொடரும்)

# பயிலுநர் பட்டதாரிகளுக்கு கிளிநொச்சியில் நியமனம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நியமனங்களைப் பெறும் பயிலுர் பட்டதாரிகளுக் கான நியமனக் கடிதங்களை ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப் பினரும், நாடாளுமன்றக் குழுக் களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் நேற்று முன்தினம் வழங்கினார்.

கிளிநொச்சி மாவட்ட செய லகத்தில் இதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் சுமார் 92 பட்டதாரிப்பயிலுநர்கள் இந் நியமனங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர குமார் இன்று சுமார் 92 வரை யான பட்டதாரி பயிலுநர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற் படுவதற் கான நியமனங்களைப் பெறு கின்றனர். இதேவேளை இவ் அமைச்சினால் நடை முறைப் படுத்தப்பட்டுள்ள வாழ் வின் எழுச்சி (திவிநெகும) திட் டத்தி னூடாக மக்கள் மிகப் பெரும் பயனைப் பெறக்கூடிய சந்தர்ப் பம் உள்ளது ஆனால் அத்திட் டத்தின் தொடர் செயற் பாடுகள் குறித்து சர்ச்சைகள் நிலவி வரு கின்றன இதே வேளை. வடமா காணத்தில் சுமார் ஒரு இலட்சம் வரையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சமுர்த்தி நிவார ணங்களைப் பெற்றுவருகின் றனர். அதில் கிளிநொச்சி முல் லைத்தீவு மாவட்டங் களில் சுமார் முப்பது வீதமான வர்கள் இத்திட்டத்திற்கு உள்வாங்கப் பட்டிருக்கின்றனர். ஆகவே இத் திட்டங்கள் வெற்றிகரமாகத் தொடர்ந்து நடைமுறைப்படுத் தும் சூழல் உருவாகுமிடத்து வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களின் வாழ் வாதா ரத்திற்கு மிகவும் உறுதுணை யாக அமையும் எனக் குறிப் பிட்டார். தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்தி திட்டத் திற்குள் உள்வாங்கப்பட்ட பய னாளிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் வங்கிக்கணக்குப் புத்தகங்களை வழங்கி சமுர்த்தி திட்டத்தினையும் ஆரம்பித்து வைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட அர சாங்க அதிபர் ரூபவதி கேதீஸ் வரனின் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீ நிவாசன், உதவி அரசாங்க அதிபர் தலைமைப்பணிமனை திருமதி ஜெயராணி, கரைச்சி உதவி அரசாங்க அதிபர் நாகேஸ்வரன், பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் சத்திய சீலன், பூநகரி உதவி அரசாங்க அதிபர் வசந்தகுமார், கண்டா வளை உதவி அரசாங்க அதி பர் முகுந்தன் ஈழமக்கள் ஜனநா யகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநா தன், ஆகியோரும் மற்றும் பிர தேச செயலகங்களின் பிரதித் திட்டப்பணிப் பாளர்களும், பயி லுனர் பட்டதாரிகளும், சமுர்த்தி பயனாளிகளும் கலந்து கொண் டனர்.

## பரமர் சங்கமம்



'வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும் நெல் உயர குடி உயரும் குடியுயரக் கோனுயர்வான' என்பது ஔவை கூற்று.

இப்ப எல்லாம் அப்படிச் சொல்லே லாது ஏனெண்டால் விடியக்கு முன்னம் சாமத்திலே பொருட்களின் விலைகள் உயருற காலம். கடந்த வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 26ஆம் திகதி கோதுமை மாவின் விலை இந்த 2012ஆம் ஆண்டில மட்டும் மூண் டாவது முறையாகக் கூட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நடைமுறையில் பாத்தா அது பிழையில்லை. இப்ப நாங்க எல்லாத்துக்கும் சர்வதேசத் தோடதான ஒப்பிட்டுப் பாக்கிறது. அங்கை யெல்லாம் பொருட்களின் விலை இஞ்சத்தையை விட பத்து மடங்கு கூடத் தானே!

அதுபோல அங்கை சம்பளங்களும் கூட எண்டதால பிரச்சினை இல்லை. இஞ்சை பொருட்களின் விலைகள் அதிகரிக்கிற மட்டத்துக்குச் சம்பளங்கள் கூட்டப்படேல்லை.

அதாலதானை அரச வைத்திய அதிகாரிகள் வேலைப் புறக்கணிப் பில ஈடுபட்டவை. அதோட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் அரசாங்கம் வாக்குறுதி செய்தபடி நடந்து கொள்ளேல்ல எண்டும் அதி ருப்தி தெரிவித்திருக்கு.

சுகாதாரப் பகுதி ஊழியர் சங்கங்கள் தமது ஊதியத்தை அதிகரிக் குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது. இவர்களுக்கு 30 ஆயிரத்திலி ருந்து 40, 50, 60 ஆயிரங்கள் வரையும் மாதாந்த சம்பளங்கள் கிடைக்கின்றன.

இவர்களே அதனுள் அதிகரிக்கின்ற விலை வாசிகளால் வாழ முடியவில்லை எண்டால் சாதாரணமாக 15 ஆயிரத்துக்கும் குறைவாக மாதாந்த ஊதியம் பெறுவோரின் நிலைமை எப்பிடி இருக்கும்?

ஒருசில வேளை உணவுகளை ஒறுப்பதின் மூலமாகத்தான் சமாளிக்க முடியும். இப்புடியே நிலைமை போனால் சூடான், சோமாலிய மக்களின் தோற்றத்தில் இலங்கையரும் தோற்றம் பெறுவரென்பது மட்டும் தவிர்க்க முடியாதல்லவா?

இதேவேளை கிழக்காசியாவிலே இலங்கை கல்வி அறிவில் 97 வீதமாக முன்னணியில் இருப்பதான செய்தி மகிழ்ச்சியை ஊட்டுகிறது. நமது நாடு செல்வம் கொழிக்கா விட்டாலும் எல்லாத்துறைகளிலும் முன்னணியில் வளர்ந்து கொண்டிருக்கையில் விலை வாசியிலும் உயர்ந்து வருகிறது. ஒப்பீடு மட்டத்தில் சரி.

ஔவையார் அந்தக்காலத்தில் சொல்லிய கூற்றை இந்தக்காலத்துக்கு ஏற்றமாதிரிப் போட்டால் வரி உயர விலை உயரும் விலை உயரப் பசி உயரும் பசி உயரப் பறை உயரும் என்று அமையும்.

பறை என்றால் மரணச் சடங்குகள் உயரும் என்று பொருள். ஆயி னும் எம்மைச் சுற்றிய பிரதேசங்களில் அதாவது கீழை மேலையத் தேசங்களில் நடக்கின்ற நடைமுறைதான் சிறுகச்சிறுக எம்மை வந் தடையும் என்பதுண்மை!

வரி உயர விலை உயரும் விலை உயர வேதனம் உயரும் வேத னம் உயர்ந்தால் வேளைக்கு வேளை வயிறு நிரம்பும் கட்டிப் போட்டு அடிச்சாலும் சரி, அடிச்சுப் போட்டுக் கட்டினாலும் சரி என்ன நான் சொல்லுறே...

## ஓய்வூதியம் இல்லை

(யாழ்ப்பாணம்)

கமத் தொழில் மற்றும் கம நலக்காப்புறுதி சபையினால் கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத் தின் கீழ் 2002 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதியம் வழங்கப் பட்டு வருகின்றது. மாதாந்தம் 1067 ரூபா வழங்கப்பட்டு வந் துள்ளது.

எனினும் இவ் ஓய்வூதியக் கொடுப்பனவு தற்போது வழங் கப்படவில்லை என ஓய்வூதியம் பெறும் கமக்காரர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். கடந்த ஏப் பிரல் மாதம் தொடக்கம் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படா மையால் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், தாம் சம் பந்தப்பட்டவர்களிடம் வினா வியபோது, திறைசேரியில் இருந்து நிதி கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

(இ)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மின்தடை தொடர்பான அறி வித்தலுக்கு மேலதிகமாக வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதால்

07.11.2012 புதன்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி, நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி,

சாமியன் அரசடிப் பிரதேசம், சம்மந்தர் கடைப் பிரதேசம், துன்னாலை, குடவத்தைப் பிரதேசம்,

யாக்கருப் பிரதேசம், கிழவிதோட்டம், அன்னங்கை முதல் கே.கே.எஸ் வீதி கோவில் வாசல் சந்தி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்

09.11.2012 வெள்ளிக்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் அன்னங்கை முதல் கே.கே.எஸ் வீதி கோவில் வாசல் சந்தி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் பிரதேசங்களிலுள்ள மின் விநியோக மார்க்கங்களுக்கு இடையூறாகவுள்ள மரங்கள், மரக் கொம்புகள், தென்னை ஓலைகள், பனை ஓலைகள் என்பவற்றை வெட்டியகற்றி தடையற்ற மின்சார விநியோகத்தைப் பெற்றுக் கொள்ள மின்சார சபைக்கு உதவுமாறு பொதுமக்களை மின்சார சபையினர் கேட்டுள்ளனர்.

# முரசின் இன்றைய பலன்

(07.11.2012 – புதன்கிழமை

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 22 ஆம் திகதி. நட்சத்திரம்: ஆயிலியம்.
முன்னிரவு 7.27 வரை மரணயோகம். திதி :அட்டமி பிற்பகல் 1.59 வரை. பின் நவமி.
இராகுகாலம் 12.05 - 1.35 வரை. சுபநேரம் 4.35 - 6.05 வரை.
எமகண்டம் 7.35 - 9.05 வரை, குளிகன் காலம் 10.35 - 12.05 வரை.
-அட்டமி நவமி, கேதாரகௌரி விரத 15 ஆவது நாள்-

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உறவினர் தொந்தரவு. பெருந்தன்மை வெல்லும். வேலைகளில் தாமதம். மிதமான பணவரவு. உடல் நலம் பலம்பெறும். எதிர்காலம் பற்றிய கவலை. போராடி வெல்லும் நாள். |
| ரிஷபம் | புதிய திட்டமிடல். இடையூறு செய்வோரை இனங் காண்பீர்கள். தொழில் நல்ல முன்னேற்றம். ஆதாய வரவு. வீட்டுப்பொருட்கள் வாங்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி. ஆரோக்கியம். |
| மிதுனம் | மனதில் சிறுகுழப்பம். எதிர்கால சிந்தனை. வளர்ச் சிக்கு ஆலோசனைகள் கிடைக்கும். எதிர்பார்த்த பணவரவு. தேடிய பொருள் கைவரும். சேமிப்பு செலவாகும். போக்குவரத்தில் கவனம். |
| கடகம் | வேலைச்சுமை. சக ஊழியர்களுடன் இழுபறி. பக்கு வமாக செயற்பட வேண்டிய நாள். பணவரவு திருப்தி. வெளியூர் நற்செய்தி. அமைதிக்கு தெய்வ வழிபாடு. இல்லறத்துணை ஆதரவு. |
| சிம்மம் | முன்பு செய்த உதவிக்கு நற்பலன். மனதில் மகிழ்ச்சி. தொழில் அபிவிருத்தி. ஆதாயம். உறவும் நட்பும் அனு சரணை. விருந்து உபசரிப்பு. அரசு வழியில் அனு கூலம். நல்வாய்ப்புகள். |
| கன்னி | சுயதேவையை பூர்த்தி செய்யும் பேரார்வம். நட்பில் மனக்கிலேசம் வரலாம். தொழில் வளர்ச்சி. அள வான பணவரவு. கடன் பெறவும் நேரும். புத்திரரால் பெருமை. வருந்தியுழைப்பு. |
| துலாம் | பழைய நினைவுகள். தாய் வழி உறவில் சச்சரவு. பய ணங்களால் ஆதாயம். அதிரடி இலாபமும் சலுகை களும். இழந்த உரிமைகள் மீளும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள். |
| விருச்சிகம் | தடைகளை வெல்லும் விவேகம். குழப்பம் தீரும். தொழில் சிறந்து, கூடுதல் கௌரவம். உபரி பணவரவு, முதலீடாக மாற்றுவீர்கள். அறப்பணியில் திருப்தி. சயோசித நாள். |
| தனுசு | வளம்பெற புதிய வாய்ப்பு. நம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். உபரி வருமானம். குடும்பத் தேவை நிறைவேறும். உறவினர் சுபநிகழ்வு. களிப்பு. சமூகப்பணியில் ஆர்வம். |
| மகரம் | வாக்குறுதிகளைத் தவிருங்கள். நிதான நடைமுறை நன்மை தரும். வேலையில் குறுக்கீடுகள். முக்கிய செலவு வரும். மருத்துவ சிகிச்சை உதவும். கவலை வந்து நீங்கும். |
| கும்பம் | மனதில் பெருமிதமும், நிம்மதியும். வளர்ச்சி நிலை. உபரி வருமானம். எதிலும் சாதக முடிவுகள். எதிர்ப்பு களை வெல்வீர்கள். எதிர்பார்த்த சலுகை வரும். சாதனையும் வழிபாடும். |
| மீனம் | பிள்ளைகளால் சமூக அந்தஸ்து. வெளியூரிலிருந்து நல்ல செய்தி. பழைய நண்பர் சந்திப்பு. வரவு உயரும். பொறுப்புகள் தேடி வரும். குடும்ப உறவு பலம். தொட்டது துலங்கும். |

## Answer the questions

1) What is your father? ....................................................

2) Do you have a sister? ....................................................

4) How old are you ? ....................................................

5) What is your name? ....................................................

## Say true of false

1) Traffic lights are an the road ( )


2) Fishes are in the market ( )

3) Sun gives light in night ( )

4) Flowers are ugly in our surrounding ( )

5) Tree can uses for the furniture ( )

## Do the puzzle






தரம் 2-3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2012

# கல்வி முரசு


1 மணி

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

## Read and match

| | |
|---|---|
| 1) Moter | Soda |
| 2) Drink | Rice and curry |
| 3) Eat | Cycle |
| 4) Three wheeler | Air |
| 5) Aeroplane | Auto |

## Make five words from there letters in family




1) ....................................................


2) ....................................................

3) ....................................................


4) ....................................................


5) ....................................................

## Fill in the blanks

1) Bala take a .................................................... 


2) We play .................................................... 

3) .................................................... is going on the road 

4) Kamala is eating .................................................... 

5) Malar is drinking .................................................... 

### Write the name of the picture



1) ..........................................

2) ..........................................

3) ..........................................

4) ..........................................

2) ..........................................

### Write in the suitable coloum

| Furniture | Fruit | Vegetable |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

chair, mango
beans, apple, table,
pumpkin, desk,
grapes,
chilly

### Write about your family in 4 sentence

1) ..........................................

2) ..........................................

3) ..........................................

4) ..........................................

### Arrange and write

1) a/ farmer / in / the / field / is ..........................................

2) Teacher / water / is / the/ drinking ..........................................

3) My / driver / is / a / uncle ..........................................

4) Doctor / work / hospital / in / the ..........................................

5) God / I / Pray / all / for ..........................................

### Read and Draw

1) Three Birds ..........................................

2) Five leaves ..........................................

3) Six Chairs ..........................................

4) Cup and Saucer ..........................................

5) Bucket ..........................................

### Write 5 words in this picture



1) ..........................................


2) ..........................................

3) ..........................................

4) ..........................................

5) ..........................................

# முல்லைப் பெரியாறு விவகாரம் அடுத்த வருடம் இறுதிக்கட்ட விசாரணை



கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு அணையின் உறுதித் தன்மை குறித்து

தொடரப்பட்ட வழக்கின் இறுதி விசாரணை அடுத்த வருடம் பெப்ரவரி 19ஆம் திகதி நடைபெறும் என்று உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

முல்லைப் பெரியாறு அணையின் உறுதித் தன்மை குறித்து கேரள அரசு எழுப்பிய பிரச்சினையை அடுத்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் வந்தது.

அப்போது, இந்த வழக்கின் இறுதி விசாரணை பெப்ரவரி 19ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்குள் இவ்வழக்கு தொடர்பான ஆவணங்களை இரு மாநில அரசுகளும்(தமிழகம், கேரளா) பரிசீலனை செய்து அதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அது குறித்து ஜனவரி 28ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தை அணுகி விளக்கம் கோரலாம் என்றும் டி.கே. ஜெயின் தலைமையிலான 5 பேர் கொண்ட அரசியல் சாசன அமர்வு நேற்று உத்தரவிட்டது.

# கசாப்புக்கு டெங்கு காய்ச்சல்



மும்பை தாக்குதல் வழக்கில் தூக்கு தண்டனை கைதியான அஜ்மல் கசாப்புக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

மும்பையில் 26.11.2008ஆம் ஆண்டு, பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய அதிரடி தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர்.


தொடர்ச்சியாக நடந்த பொலிஸ் பதிலடியில் பயங்கரவாதிகள் அனைவரும் கொல்லப்பட்டனர் உயிருடன் சிக்கிய அஜ்மல் கசப்புக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பலத்த பாதுகாப்புடன் மும்பை, ஆர்தர் ரோடு சிறையில் அடைக்கப்பட்டுள்ள கசாப்புக்கு இப்போது 25 வயதாகிறது.

கடந்த நான்கு நாட்களாக டெங்கு காய்ச்சலால் பாதித்துள்ளதால் அதற்காக சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக சிறை அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

இந்தியச் செய்திகள்

# மிசோரம் மாநில முதல்வர் மயிரிழையில் உயிர் தப்பினார்



மிசோரம் மாநிலத்தின் முதல்வர் லால் சென்ற விமானம் மோசமான வானிலை காரணமாகத் தரையிறங்கியது.

மிசோரம் முதல்வர் லால் தங்ஹாவாலா, ஏர்இந்தியா விமானம் மூலம் கொல்கத்தாவிலிருந்து தலைநகர் அசிவால் புறப்பட்டார்.

ஆனால் மோசமான வானிலை காரணமாக, மீண்டும் அசிவால் விமான நிலையத்திற்கே நள்ளிரவில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

மோசமான வானிலை காரணமாக விமானம் விபத்துக்குள்ளாவது சகஜமாகியுள்ள நிலையில் இதன் மூலம் முதல்வர் லால் உயிர்தப்பினார்.

# நித்தியானந்தாவின் சீடர்களிடம் விசாரணை

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம் சீரகாபாடியைச் சேர்ந்த விவசாயி குணசேகரன், தனது 50 பரப்பு நிலத்தை ஆசிரமம் அமைக்க நித்தியானந்தாவுக்குத் தானமாகக் கொடுத்துள்ளார்.

ஆனால் தானமாகக் கொடுத்த நிலத்தை, விலைக்கு வாங்கியது போல் நித்யானந்தாவின் ஆதரவாளர்கள் பத்திரம் பதிவு செய்துள்ளனர்.

இதை அறிந்த குணசேகரன்,



கடந்த 3ஆம் திகதி சேலம் மாவட்ட எஸ்.பி அலுவலகத்தில் நித்தியானந்தா மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது நில அபகரிப்புப் புகார் அளித்துள்ளார்.

இந்தப் புகார் தொடர்பாக விவசாயி, நித்யானந்தாவின் சீடர்கள் சென்னகிருஷ்ணன், சக்தி உட்பட 4 பேர் மாவட்ட பொலிஸ் அலுவலகத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

பின்னர் அவர்களிடம் மாவட்ட பொலிஸ் அதிகாரி அஸ்வின் கோட்னீஸ் விசாரணை நடத்தினார்.

இது குறித்து மாவட்ட பொலிஸ் அதிகாரி அஸ்வின் கோட்னீஸ் கூறுகையில், புகார் மனு மீது நில அபகரிப்பு தடுப்பு பிரிவு டி.எஸ்.பி விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

இதனைத்தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# இந்திய மண்ணில் பாகிஸ்தான் அணியோடு கிரிக்கெட் விளையாடுவது தேசத் துரோகம்

## - பால்தாக்கரே -




மும்பையில் கடந்த 2008ஆம் ஆண்டு பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடல் மார்க்கமாக ஊடுருவி நடத்திய கொடூர தாக்குதல் சம்பவத்திற்கு பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடன் இந்திய கிரிக்கெட் அணி நேரடியாக விளையாடுவதற்கு மத்திய அரசு தடை விதித்தது.

உலக கோப்பை, ஆசிய கோப்பை உள்ளிட்ட பொதுவான போட்டிகளில் மட்டும் இரு அணிகளும் கலந்துகொண்டு விளையாடி வந்தன. மேலும் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் எதிர், எதிர் நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து கிரிக்கெட் விளையாடுவது கடந்த சில ஆண்டுகளாக நடைபெறவில்லை.

இந்த நிலையில் இரு நாட்டின் கிரிக்கெட் வாரியங்களும் மீண்டும் உறவைப் புதுப்பிக்க முயற்சி எடுத்ததன் பலனாக மத்திய உள்துறை அமைச்சகம் பாகிஸ்தான் அணியின் இந்திய சுற்றுப்பயணத்திற்கு அனுமதி அளித்தது. இதற்கு சிவசேனா கட்சி மற்றும் மராட்டிய நவநிர்மாண் சேனா கட்சி கண்டனம் தெரிவித்தன.

மேலும் இந்திய மண்ணில் பாகிஸ்தான் அணியோடு கிரிக்கெட் விளையாடுவது தேசதுரோகம் என்று சிவசேனா கட்சியின் தலைவர் பால் தாக்கரே தெரிவித்திருந்தார். பாகிஸ்தான் நாட்டிற்கு எதிரான பழைய சம்பவங்களை மறந்து விடுங்கள் என்ற மத்திய உள்துறை மந்திரி சுஷில்குமார் ஷிண்டேயின் கருத்திற்கும் பால்தாக்கரே கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

# ஆந்திராவில் தொடரும் வெள்ளம் ஒரு இலட்சம் மக்கள் வெளியேற்றம்



ஆந்திராவில் பெய்து வரும் தொடர் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்குக் காரணமாக சுமார் ஒரு இலட்சம் பேர் தங்களது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

நிலம் புயலின் தாக்கத்தால் ஆந்திராவில் பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் கரையோரத்திலுள்ள 6 மாவட்டங்களில் ரயில் மற்றும் வாகனப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் அண்மையில் பெய்த மழையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 25ஆக உயர்வடைந்துள்ளதுடன், சுமார் 1,500 வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் வெள்ளத்தால் தத்தளித்துக் கொண்டிருந்த சுமார் 2,000 பேருக்கு மீட்புப் பணியாளர்கள் உதவியளித்துள்ளனர்.


வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர் : க. துஷந்திகா

முகவரி: 9ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

அகவை 7 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர் : ச. பிரவின்

முகவரி: உடுத்துறை வடக்கு, தாளையடி

அகவை 1 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# ஓடுதளமின்றி பறக்கும் அதி நவீன ஆளில்லா விமானம்

## —ஈரான் அசத்தல்



அமெரிக்காவிற்கு போட்டியாக அதி நவீன ஆளில்லா விமானங்களை ஈரான் தயாரித்துள்ளது.

அமெரிக்கா தயாரிப்பில் உருவாகியுள்ள இவ்வகை விமானங்களுக்கு ஓடுதளம் தேவை.

ஆனால் ஈரான் தற்போது தயாரித்துள்ள இந்த விமானங்களுக்கு ஓடுதளம் தேவையில்லையாம்.

ரொக்கட் போல விண்ணில் அதிவேகத்தில் பறந்து எதிரிகளை துல்லியமாக தாக்கக் கூடியதாம்.

ஈரானின் அப்பாஸ் ஜாம் என்ற விஞ்ஞானி இதை வடிவமைத்து இருக்கிறார். இது போன்ற விமானம் உலகில் தயாரிக்கப்படுவது இதுவே முதன் முறையாகும்.

ஈரானில் வருகிற ஞாயிற்றுக்கிழமை கடற்படை தளம் திறக்கப்பட உள்ளது. அப்போது இது குறித்த தகவலை அந்நாடு வெளியிடுமெனத் தெரிகிறது.

கடந்த ஒக்ரோபர் மாதம் இஸ்ரேலில் ஜீவில் மாகாணத்தில் அத்து மீறி நுழைந்த ஒரு ஆளில்லா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. அது தங்களுடையது என லெபனான் இராணுவம் உரிமை கொண்டாடியது.

ஆனால் சுட்டு வீழ்த்தப்பட்ட அந்த விமானத்தின் உதிரிபாகங்கள் ஈரானில் தயாரிக்கப்பட்டு லெபனானில் பொருத்தப்பட்டிருப்பதை இஸ்ரேல் இராணுவ மந்திரி அகமது வகிடி தெரிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவை மிரட்டும் புதிய புயல் சின்னம்



சமீபத்தில் சான்டி புயல் அமெரிக்காவையே புரட்டி போட்ட நிலையில், தற்போது புதிய புயல் சின்னம் உருவாகி உள்ளது.

கடந்த வாரம் வீசிய சாண்டி புயல், அமெரிக்காவை நிலை குலையச் செய்து விட்டது.

இந்நிலையில் வருகிற வாரத்தின் பிற்பகுதியில் அமெரிக்காவின் வடகிழக்கு கடற்கரை பகுதியில் மற்றொரு புயல் வீசும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மேலும் அத்லான்திக் மத்திய கடல் மற்றும் புதிய இங்கிலாந்து கடல் பகுதியில் மணிக்கு 50 மைல் வேகத்தில் பலத்த காற்று வீசும்.

மரங்கள்- மின் கம்பங்கள் சாயலாம், பல அடி உயரத்திற்கு இராட்சத கடல் அலைகள் எழும்பும், கடும் பனிப்பொழிவும் இருக்கும். மொத்தத்தில் சான்டிக்கு நிகரான பாதிப்பை விளைவிக்க கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமானம் தாங்கிக் கப்பலுக்கு ஓய்வு



அமெரிக்காவின் வெர்ஜீனியா மாகாணம் நார்ஃபோல்க் கடற்படை தளத்துக்கு ஞாயிற்றுக்கிழமை வந்த யு எஸ் எஸ் எண்டர்பிரைஸ் கப்பல். அணுசக்தியில் இயங்கும் உலகின் முதல் விமானம் தாங்கிக் கப்பலான இது 51 ஆண்டுகால கடற்படை சேவைக்குப்பின் ஓய்வு பெற்றுள்ளது. மொத்தம் 5,500 கடற்படை வீரர்கள், ஊழியர் கள் இக்கப்பலில் பணியாற்றினர். 8 அணு உலைகளுடன் இக்கப்பல் செயற்பட்டது. இறுதிப் பயணத்தை முடித்துக் கொண்டு வந்த கப்பலில் வந்த வீரர்களையும், ஊழியர்களையும் உறவினர்களும், நண்பர்களும் கூடி வரவேற்றனர்.

# சிரியாவில் கார்க் குண்டுவெடிப்பு 50 இற்கும் மேற்பட்டோர் பலி

சிரியாவில் உள்நாட்டுப் போர் திவீரமடைந்துள்ள நிலையில், அங்கு இருதரப்புகளும் தாக்குதல்களை அதிகரித்துள்ளன. சிரியாவின் ஹமா மாகாணத்தில் செயற்பட்டு வரும் மாநில மேம்பாட்டு நிறுவனத்தில் குண்டுகள் நிரப்பப்பட்ட காரைக்கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் இருவர் இறந்ததாக அரசு அறிவித்துள்ளது. ஆனால் 50 க்கும் மேற்பட்டோரை கொன்றுவிட்டதாக புரட்சிப்படையினர் கூறியுள்ளனர்.



தலைநகர் டமாஸ்கசில் அரசின் ஆதரவாளர்கள் அதிகம் உள்ள மேற்குப்பகுதியில் இரண்டாவது கார்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர். தெற்குப் பகுதியில் அரசுப்படை விமானம் தாக்கியதில் பொதுமக்கள் 30 பேர் இறந்ததாக செய்திகள் கூறுகின்றன. வடக்கு எல்லையில் உள்ள ஹரிம் நகரில் விமானப்படை தாக்குதலில் 20 புரட்சிப்படையினர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சிரியாவில் முக்கிய எதிர்க்கட்சிகள் சார்பில் அமைக்கப்பட்டுள்ள சிரியா தேசிய சபை அமெரிக்கா அறிவித்துள்ள முடிவை ஏற்பது குறித்து ஆலோசித்து வருகிறது.

உலகச் செய்திகள்

# சான்டி புயலால் பாதிக்கப்பட்டுள்ள எங்கள் நாட்டுக்கு உதவுங்கள்

## - ஹைட்டி பிரதமர்



சான்டி புயலால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள எங்களுக்கு உதவி செய்யுங்கள் என உலக நாடுகளுக்கு ஹெட்டி நாட்டின் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கரிபியன் நாடுகளில் ஒன்றான ஹெட்டி நாட்டை சமீபத்தில் வீசிய சான்டி புயல் மிக கடுமையாகத் தாக்கியுள்ளது.

இந்தப் புயலுக்கு 50 பேர் உயிரிழந்ததுடன், பயிரிடப்பட்ட 70 சதவிகித விளைநிலங்களும் தண்ணீரில் மூழ்கி உள்ளன.

இதனால் கடுமையான உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும் நாடு முழுவதும் தண்ணீர் நிரம்பியுள்ளதால் கொலரா அபாயமும் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்க பாதிப்பிலிருந்தே இன்று வரையிலும் மீண்டு வராமல் இருக்கும் ஹெட்டிக்கு, சான்டி புயல் பலத்த அடியாக உள்ளது.

அந்நாட்டில் இதுவரையிலும் கொலரா நோய்க்கு மட்டும் 7,500 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் தங்கள் நாட்டின் பேரழிவை சரிசெய்ய உலக நாடுகள் உதவ வேண்டும் என பிரதமர் லாரண்ட் லாமோத் கோரிக்கை விடுத்துள்ளார்.

# வெள்ள அபாய எச்சரிக்கை



இங்கிலாந்தின் மேற்கு மற்றும் தென் பகுதியில் பனி அதிகமாக படர்ந்துள்ளதால், வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் சோமர்செட், வில்ட்ஷயர் மற்றும் டோர்செட் பகுதிகளில் நேற்று காலை முதல் பனி பொழியத் தொடங்கியது.

மேலும் பனி உருகத் தொடங்கியுள்ளதால், இப்பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இத்துடன் பேத், புரோம், மிட்சோமர், நார்ட்டன் மற்றும் ரேட்ஸ்டோக் பகுதிகளில் அரையடி உயரத்திற்கும் மேலாக பனி படர்ந்துள்ளது. இது குறித்து வெள்ள இடர் மேலாளர் கிரேக் உல்ஹவுஸ் கூறுகையில், இந்த ஆண்டில் கோடை காலத்தில் பெருமழை பொழிந்ததால் நிலத்தடி நீர் உயர்ந்துள்ளது.

இந்நிலையில் பனிக்காலத்திலும் பனிப்பொழிவு அதிகமாக இருக்கும் போது பனி உருகி வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# அரிய விண்வெளிப் புகைப்படங்கள் ஏலம்



ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் 1000க்கும் மேற்பட்ட அரிய விண்வெளி புகைப்படங்கள் ஏலத்திற்கு வருகின்றன.

விண்வெளி ஆராய்ச்சியின் ஆரம்ப காலத்தில் எடுக்கப்பட்ட 4,500 புகைப்படங்களே இவ்வாறு ஏலத்திற்கு வருகின்றன.

இந்த புகைப்படங்களை ஐரோப்பியாவைச் சேர்ந்த புகைப்பட சேகரிப்பாளர் விற்பனைக்கு வைக்க உள்ளார்.

கடந்த 1960ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவுக்கும், அப்போதைய சோவியத் யூனியனுக்கும் இடையே விண்வெளி ஆராய்ச்சி துறையில் கடும் போட்டி நிலவியது.

ஆளில்லாத விண்கலங்கள், ஒன்று அல்லது இருவரை மட்டும் ஏற்றிச் செல்லும் விண்வெளி ஓடங்களைத் தயாரிப்பதில் இரு நாடுகளும் முனைப்புக் காட்டின.

இறுதியில் நிலவுக்கு நீல் ஆம்ஸ்ட்ராங் தலைமையில் விண்வெளி ஓடத்தை அனுப்பி அமெரிக்கா வரலாறு படைத்தது.

அப்போது நிலவில் எடுக்கப்பட்ட புகைப்படங்களும், வேறு சில அரிய விண்வெளிப் புகைப்படங்களும் இந்த ஏலத்தில் இடம் பெறவுள்ளன. இந்த ஏலத்தின் மூலம் ரூ. 4 கோடியே 14 லட்சம் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக சம்பந்தப்பட்ட ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற புகைப்படங்கள் அதிகளவில் விற்பனைக்கு வருவது உலகளவில் இதுவே முதல்முறையாகும்.

# ஊரெழு கொலை வழக்கு; அறுவருக்கு விடுதலை

(திருநெல்வேலி)

ஊரெழு கொலை வழக்கின் எதிரிகள் 6 பேரும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கில் ஊரெழு வடக்கைச் சேர்ந்த வைத்தி தில்லையம்பலம் என்பவரை ஏழாலை தெற்கு மயிலங்காடு என்னும் இடத்தைச் சேர்ந்த சரவணன் சதீஸ்குமார், நந்தன் சுதாகரன், பத்மநாதன் இந்திரஜித், டானியல் சாந்தரூபன், துரைசிறி விநாயகம், பரமசிவம் சூரியகுமார் ஆகியோர் 27.01.2004 கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவர்களில் நான்காம் எதிரியான டானியல் சாந்தரூபன் இறந்துவிட்டார். ஆறாம் எதிரியான பரமசிவம் சூரியகுமார் வெளிநாடு சென்று விட்டார்.

எதிரிகள் சுன்னாகம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வந்தது.

பின்னர் சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று இரு தரப்பு சட்டத்தரணிகளும் தமது தொகுப்புரைகளை முடித்துக்கொண்ட நிலையில் தீர்ப்புக்காக நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் சாட்சிகளாக இறந்தவரின் மனைவி அன்னப்பிள்ளை, பிள்ளைகளான சுகந்தினி, சிவகுமார், பொலிஸார் மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொண்ட வைத்திய கலாநிதி கே.இரத்தினசிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது தீர்ப்பு வழங்கப்பட்டது. சாட்சிகளின் முரண்பாடு காரணமாகவும், நியாயமான சந்தேகத்துக்கப்பால் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை எனவும் தெரிவித்து நீதிபதி ஜெ.விஸ்வநாதன் 6 எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆஜரானார். அரச தரப்பில் அரச சட்டவாதி நளினி கந்தசாமி ஆஜரானார். (137)

# கடல் அட்டை வேட்டை குடாக்கடலில் 8 பேர் கைது

யாழ். குடாக்கடலில் சட்டவிரோத இழுவைப்படகு மடி வலைகளைப் பயன்படுத்தி கடல் அட்டை பிடித்த 8 குருநகர் கடற்றொழிலாளர்களையும் 2 இழுவைப்படகுகளையும் கடற்படையினர் நேற்றுக்காலை பிடித்து யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ். குடாக்கடற்பரப்பில் இவ்வாறு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு விட்டு நேற்றுக்காலை குருநகர் இறங்குதுறையை இவர்கள் வந்தடைந்த போதே கடற்படையினர் இவர்களைப் பிடித்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து இழுவைப்படகு மடிகள் மற்றும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கடல் அட்டைகள் கைப்பற்றப்பட்டு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்றுப் பிற்பகல் இந்தக் கடற்றொழிலாளர்கள் மற்றும் உபகரணங்கள், கடல் அட்டை என்பன யாழ். நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதையடுத்து நீதவான் அந்த 8 பேரையும் பிணையில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டதையடுத்து அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் மீது யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தாக்கல் செய்த வழக்கு விசாரணை எதிர்வரும் டிசம்பர் 3 ஆம் திகதிக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (பா)




இணுவில் காங்கேசன்துறை வீதியிலும், அதன் முன்பாகவுள்ள துரை வீதியிலும் நேற்று டிப்பர் வாகனமொன்றினால் மோதப்பட்ட 2 தொலைத்தொடர்புத் தூண்கள் முறிந்த நிலையில் வயர்கள் அறுந்து தொங்கியவாறு காணப்படுவதைக் காணலாம். நேற்றுப் பிற்பகல் வரை இவை சீர்செய்யப்படவில்லை. (137)

# பிரதித் தூதுவராக தென்னாபிரிக்கா செல்கிறார் சவேந்திர சில்வா

புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரில் முக்கிய பங்கு வகித்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை தென்னாபிரிக்காவுக்கான பிரதித் தூதுவராக நியமிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கருதப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான நம்பகரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வரும் தென்னாபிரிக்கா, சவேந்திர சில்வாவை பிரதித் தூதுவராக நியமிக்க இணங்குமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

ஐ.நா.வுக்கான பிரதித்தூதுவராக இவர் நியமிக்கப்பட்ட போதும், ஐ.நா அமைதிகாக்கும் படையின் ஆலோசனை வழங்கும் முக்கிய பதவிக்கு நியமிக்கப்பட்ட போதும் கடும் எதிர்ப்புகள் கிளம்பின.

அதேவேளை, தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருமான நவநீதம்பிள்ளையும் இலங்கையில் இறுதிப்போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான நம்பகரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்.

அத்துடன் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவில் இடம் பெற்றிருந்த தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஜஸ்மின் சூகாவும் இதேகருத்தையே வலியுறுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# படகு அகதிகள் படையெடுப்பு சிலாபத்தில் 47 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்ரேலியா செல்ல முயன்ற 47பேரை நீர்கொழும்பு மற்றும் சிலாபம் கடற்பரப்புக்களில் வைத்து கடற்படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் மூன்று பெண்களும் ஐந்து சிறுவர்களும் அடங்குவதாக மேல்மாகாணக் கடற்படைத் தலைமையகம் தெரிவித்தது.

யாழ்ப்பாணம், வவுனியா, நீர்கொழும்பு, முல்லைத்தீவு, புத்தளம், கிளிநொச்சி, வத்தளை, சிலாபம், மட்டக்களப்பு, கற்பிட்டி, மாவனல்ல மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் முத்துவெல் மீனவத் துறை முகத்துக்கு அழைத்துவந்து இரகசியப் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டதாக மேல்மாகாண கடற்படைத் தலைமையகம் மேலும் குறிப்பிட்டது.

# முற்றவெளி களை கட்டுகிறது

(குருநகர்)

யாழ். முற்றவெளி, முனீஸ்வரன் சந்தி, வீரசிங்கம் மண்டபம் போன்ற பகுதிகள் வழமை போல் தீபாவளி நடைபாதைக் கடைகளை நிறுவுவதற்கு ஆயத்தமாகி வருகின்றன.

அப்பகுதிகளில் வீதி அகலிப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் கருங்கல் குவியல்கள், நிலமட்டம் சமமின்மை போன்ற இன்னோரன்ன இடையூறுகள் காணப்படுகின்றன.

எனினும் வாகனங்களைக் கொண்டுவந்து நிறுத்தி விற்பனை தொடங்கப்பட்டிருப்பதைப் பார்க்கமுடிகிறது. அதேவேளை நகரின் ஏனைய பகுதிகளிலும் புறநகர் பகுதிகளி லும் தீபாவளி வியாபாரம் களைகட்டத் தொங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (68)

## 13 ஆம்...

அமுல்படுத்த இந்தியாவின் ஆதரவு தொடர்ந்து இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். வடக்கில் தேர்தல்கள் நடத்தப்படும் போது 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பான நிலைப்பாடுகள் வெளிப்படும் எனவும், அதனை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், நாட்டின் உள்விவகார விடயங்களில் இந்தியா தலையீடு செய்யப் போவதில்லை என வெளிவிவகார அமைச்சர் குர்ஷிட் தெரிவித்துள்ளார்.

## நம்பிக்கையில்லாப்...

தனது வருமானத்துக்கும் சொத்துகளுக்கும் அவர் முறையாக கணக்கு காட்டவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியதன் மூலம் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பதவிக்கு அவர் அவப்பெயரை ஏற்படுத்திவிட்டார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

சுமார் இரண்டு கோடி ரூபாயை ரொக்கப் பணமாக கொடுத்து ஒரு சொத்து வாங்கப்பட்டுள்ளது. இந்தப் பணம் எங்கிருந்து வந்தது என்று தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்பதாக ஒரு குற்றச்சாட்டு அமைந்துள்ளது.

தேசிய அபிவிருத்தி வங்கியின் கிளை ஒன்றில் ரூபாய் 3 கோடியே 40 இலட்சம் மதிப்புடைய வெளிநாட்டுப் பணம் இவர் பெயரில் உள்ளது என்பது இன்னொரு குற்றச்சாட்டு. அதிகாரிகளிடம் தெரியப்படுத்தாமல் இருபது வங்கிக் கணக்குகள் இவரிடம் உள்ளன என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஷிராணியின் கணவர் பிரதீப் காரியவாசம் மீது ஊழல் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு கொழும்பில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது என்பதையும் இந்தக் குற்றவியல் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் நீதிமன்றத்தின் சுதந்திரத்தை ஒடுக்கும் நோக்கில் பொய்யான குற்றச்சாட்டுகள் பிரதம நீதியரசர் மீது கொண்டுவரப்படுவதாக தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதிக்கும் நீதித்துறையின் உயர்மட்டத்துக்கும் இடையில் அண்மைக் காலமாக முறுகல் நிலை ஏற்பட்டுள்ள ஒரு சூழ்நிலையில், இந்த குற்றவியல் தீர்மானம் கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானுக்கு...

கராச்சியிலுள்ள கடற்படை நிறுவனங்களுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள கடற்படைத் தளபதி இரு தரப்பு பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவுள்ளார்.

பாகிஸ்தான், காராச்சியில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் நடைபெறவுள்ள சர்வதேச பாதுகாப்புக் கண்காட்சியையும் கடற்படைத் தளபதி பார்வையிடவுள்ளார்.

## அரசியல்...

திருத்தம் செய்யப்படவேண்டியவை எனக்குறிப்பிட்டுள்ள உயர்நீதிமன்றம், திருத்தங்களின் போது எழுகின்ற முரண்பாடுகளை சரிசெய்து கொள்ளமுடியும் என்றும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

## சுகாதாரப்...

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைகளைச் செய்வதில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்தை எமது சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன், உரிய அதிகாரிகள் இது தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், சமூக அமைப்புக்களும் பொதுமக்களும் இவ்வாறான சம்பவங்களை மேலும் தொடரா வண்ணம் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம் என்றும் இச்சங்கம் விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## உக்கிரமடைகிறது...

பகுதிகளில் இருந்து ஒவ்வொருவரும், நேற்றைய தினம் கந்தர் மடம், நல்லூர், வட்டுக்கோட்டை, அராலி, குருநகர், திருநெல்வேலி ஆகிய. பகுதிகளில் இருந்து ஒவ்வொருவருமாக மொத்தம் 13 பேர் இந்த நோய்த்தாக்கத்திற்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த மாதம் இந்த நோயின் தாக்கத்திற்கு இலக்காகிய 124 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

## வாழ்வின்...


சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்று விபரிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கமைய மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் திவிநெகும சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ 'திவிநெகும' சட்டமூலத்தை இரண்டாம் வாசிப்பிற்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார் எனவும் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# முதலமைச்சர் வேட்பாளர் யார்?

# இறுதி முடிவு இன்னும் இல்லை



## இப்படிக் கூறுகின்றார் சம்பந்தன்

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில், வடமாகாண முதலமைச்சு வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், த ஏசியன் ட்ரிபியுன் இணையத்தளத்துக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சு வேட்பாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வித்தியாதரனை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல் தொடர்பில் சம்பந்தனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

எனினும் இதனை நிராகரித்த சம்பந்தன், இதுவரையில் இந்த விடயம் தொடர்பில் கட்சி உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை வடமாகாண சபைத் தேர்தல்களை எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடத்துவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும் அது முன்னதாகவே நடத்தப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் எப்போது தேர்தல் நடந்தாலும், அதற்கு முகம் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

# ஆளும் கட்சியுடன் இணைவு; முஸ்லிம் காங்கிரஸில் உடைவு

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மூவரில் இருவர் நேற்று ஆளும் கட்சிக்கு தாவியுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு தெரிவித்து ஏற்கனவே நாடாளுமன்றிலும் ஏனைய மாகாண சபைகளிலும் ஆளும் கட்சி பக்கம் தாவிய நிலையில் வடமேல் மாகாண சபை உறுப்பினர்கள் இதுவரை காலமும் எதிர்கட்சி பக்கமே இருந்து வந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் தானும் குருநாகல் மாவட்ட உறுப்பினர் ரிஸ்வியும் அரசுக்கு ஆதரவு வழங்கி ஆளும் தரப்பு பக்கம் சென்றதாக வடமேல் மாகாண சபை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுக்களின் தலைவர் எஸ்.ஏ.எஹ்யா தெரிவித்தார். மற்றொரு உறுப்பனரான தஸ்லீம் முடிவு எதுவுமின்றி எதிர்கட்சி வரிசையில் தொடர்ந்தும் இருப்பதாக எஹ்யா தெரிவித்தார்.

இதேவேளை, தமிழக கூடன்குளம் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்திற்கும் புத்தளம் - கற்பிட்டிக்கும் 160 - 200 கிலோ மீற்றர் தூரங்களே உள்ளதாகவும் அதனால் கற்பிட்டியின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் எஸ்.ஏ. எஹ்யா இன்று வடமேல் மாகாண சபையில் குறிப்பிட்டார். இவ்விடயம் குறித்து இந்திய உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடி நல்லதொரு முடிவை அறிவிக்கும்படி எஸ்.ஏ.எஹ்யா வடமேல் மாகாண் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

# பரிந்துரைகள் நிராகரிப்பு ஏன்? இலங்கையிடம் கேட்கிறது ஸ்பெயின்


ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உறுப்பு நாடுகளால் முன்வைக்கப்பட்ட 210 பரிந்துரைகளில் இலங்கையினால் நிராகரிக்கப்பட்ட 100 பரிந்துரைகளுக்கும் இலங்கை விளக்கமளிக்க வேண்டும் என்றும் ஸ்பெயின் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

உறுப்பு நாடுகளினால் நகல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் கருத்துரைத்த இலங்கை அமைச்சர் மகிந்த சமரசிங்க, எதிர்வரும் 2 வாரத்தில் இலங்கையின் சுயாதீன உறுதியுரையொன்றை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையகத்திற்கு அனுப்பவுள்ளதாகக் குறிப்பிட்டார். போருக்கு பின்னர் அபிவிருத்திகள் தொடர்பாக இலங்கை, மனிதவுரிமைகள் ஆணையகத்திடம் தொடர்ந்து அறிவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்..

உறுப்பு நாடுகளால் முன்வைக்கப்பட்ட 100 பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்டமைக்கு இலங்கை விளக்கமளிக்க வேண்டும் என்றும் ஸ்பெயின் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை கியுபா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் தமது பரிந்துரைகள் எவ்வாறான முறையில் நடைமுறைப்படுத்தப் படுகின்றன என்று ஆராயவுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

கடந்தவாரம் இலங்கை தொடர்பில் அழுத்தத்தை பிரயோகித்து வந்த இந்தியா நேற்று அமைதியான போக்கை கடைபிடித்ததுடன், பரிந்துரைகள் எதனையும் முன்வைக்கவில்லை.



2012 ஆம் ஆண்டுக்கான உலக அழகிப் போட்டியில் மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்ட இலங்கை அழகியான மதுஷா மாயாதுன்ன (வயது - 25) திங்கட்கிழமை இரவு நாடு திரும்பினார். ஜப்பான், ஒக்ரினாவில் நடைபெற்ற 54 ஆவது உலக அழகிப் போட்டியில் 60 பெண்கள் பங்கேற்ற நிலையில் இலங்கை சார்பில் பங்குபற்றிய மதுஷா மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## 65 ஆயிரம் மேன்முறையீடுகள்

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தொடர்பில் 65 ஆயிரத்திற்கும் அதிகமான மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதாகத தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. கிடைக்கப்பெற்றுள்ள மேன் முறையீடுகளைப் பரிசீலனை செய்யும் நடவடிக்கைள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள் ஊடாக இந்த மேன்முறையீடுகள் பரிசீலனை செய்யப்படவுள்ளன. 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியல் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு கடந்த 31 ஆம் திகதி வரை காலஅவகாசம் வழங்கப் பட்டிருந்தது.

மேன்முறையீடுகளை பரிசீலனை செய்ததன் பின்னர் வாக்காளர் பெயர்ப்பட்டியலின் இறுதி அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலை அடுத்த மாதம் 31 ஆம் திததிக்குள் உறுதிப்படுத்துவதற்கு தேர்தல்கள் செயலகம் திட்டமிட்டுள்ளது என்றார்.

# சத்திரசிகிச்சை உபகரணங்கள் இறக்குமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

தேவைப்படும் சத்திர சிகிச்சை உபகரணங்களை மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய விசேட நிபுணர்களின் ஊடாக தேவையான சத்திர சிகிச்சை உபகரணங்களின் பட்டியல் மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் கமல் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் 14 ஆயிரத்து 447 ஆகக் காணப்பட்ட சத்திர சிகிச்சை பொருட்கள் ஐயாயிரம் வரை குறைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

சுகாதார துறையின் ஒவ்வொரு பிரிவிற்கும் தேவையான சத்திர சிகிச்சை உபகரணங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதாக டாக்டர் கமல் ஜயசிங்க கூறினார்.

இதன்போது தேவயைற்ற உபகரணங்களை நீக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் அமைச்சு குறிப்பிடுகிறது.

அத்துடன் விசேட நிபுணர்களின் ஊடாகத் தேவையான சத்திர சிகிச்சை உபகரணங்களின் பட்டியலில் புதிதாக சில உபகரணங்களும் சேர்க்கப்பட்டதாக மருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.



திவிநெகும சட்டமூலத்துக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவளிக்குமாறு கோரி நாடாளுமன்றத்துக்கு செல்லும் பிரதான வீதியில் நேற்று நண்பகல் ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படபலர் கலந்துகொண்டனர். இதனால் நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது

## நீர் மின் உற்பத்தி 50 வீதத்தினால் அதிகரிப்பு

நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் நீர் மின் உற்பத்தி 50 வீததினால் அதிகரித்துள்ளது. தொடர்ச்சியாக பெய்த மழையினால் நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளமை இதற்குக் காரணமென இலங்கை மின்சார சபையின் உப தலைவர் அனுர விஜேபால தெரிவித்துள்ளார்.

மழையினால் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 80 வீதத்தினாலும் மவுசாகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 72.5 வீதத்தினாலும் அதிகரித்துள்ளது. காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 65.4 வீதத்தினாலும், சமனல வாவியின் நீர்மட்டம் 27 வீதத்தினாலும் அதிகரித்துள்ளதாக மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# அரியம் எம்.பி. அமெரிக்காவில்

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் மற்றும் அமெரிக்க இராஜாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது. தென்னாசியாவின் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க செயலர் Alyssa Ayres மற்றும் மனித உரிமை விகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் உதவிச் செயலர் Jane Zimmerman ஆகியோருடன் இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குறிப்பாகப் போரினால் கணவன்மார்களை இழந்து நிற்கும் பெண்களின் வாழ்வாதாரப் பிரச்சினை, காணாமல்போயுள்ளவர்களின் நிலைமை மற்றும் சமீபத்தில் நடந்து முடிந்த கிழக்கு தேர்தல் நிலைவரங்கள் குறித்து இசந்திப்பில் உரையாடப்பட்டுள்ளது. இதேவேளை, அமெரிக்காவின் வேறுபல அரச மற்றும் அரசியல் மட்டப் பிரதிநிதிகளுடனும் சந்திப்புக்களை நடத்தியுள்ளார். தொடர்ந்து அமெரிக்காவின் இலங்கைத் தமிழ்ச் சங்கத்தில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

# வெள்ளவத்தையில் வழிப்பறி பறிபோனது தங்க நகை

வெள்ளவத்தையில் தனியாகச் சென்ற பெண்ணிடம், போலித துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதுடன் அவரின் தங்கச்சங்கிலியைப் பறித்துச் சென்ற சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் மாலை குறித்த பெண்ணை பின்தொடர்ந்து சென்ற நபரொருவர், அப் பெண்ணின் கழுத்தை நெரித்து தங்கச் சங்கிலியை பறித்துச் சென்றுள்ளார்.

அப்பெண் சத்தப்போட்டதும், இதனை அவதானித்த பிரதேச வாசிகள் சந்தேகநபரை மடக்கிப் பிடிக்க பின்தொடர்ந்த போது போலி துப்பாக்கியை காட்டி மிரட்டியுள்ளதுடன் சைக்கிளில் தப்பித்துச் சென்றுள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபரை வெள்ளவத்தை பொலிஸார் மடக்கிப்பிடித்ததுடன் மேலதி விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக வெள்ளவத்தைப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.